மாநகர சபை, யாழ்ப்பாணம்

விலை ரூபா: 10.00


Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 29 வெள்ளிக்கிழமை (11.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 114




# ஸ்லோவோக்கியாவிடமிருந்து இலங்கை 10 ஆயிரம் ஏவுகணைகள் கொள்வனவு

## ஆயுத வர்த்தகக் கண்காணிப்புக் குழு எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு 10 ஆயிரம் ஏவுகணைகளை ஸ்லோவோக்கியா விற்பனை செய்துள்ளது. இதற்கு உலகப் பாதுகாப்பு அமைப்பின் ஆயுத வர்த்தகக் கண்காணிப்புக் குழு எதிர்ப்புத்தெரிவித்துள்ளது. ஸ்லோவோக்கியாவின் இந்த செயற்பாடானது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆயுத ஏற்றுமதி நடத்தை விதிமுறைகளை மீறியதாகும் என்றும் அந்த அமைப்புச் சாடியுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஜெயராஜின் பூதவுடல் மணற்சேனை மயானத்தில் நல்லடக்கம்

(கொழும்பு)

படுகொலை செய்யப்பட்ட அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் பூதவுடல் பல்லாயிரக் கணக்கான மக்களின் அஞ்சலிக்கு மத்தியில் அரசாங்கத்தின் பூரண மரியாதையுடன் நேற்று மாலை அன்னாரின் குடும்ப மயானமான நீர்கொழும்பு கொச்சிக்கடை மணற்சேனை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இறுதிக் கிரியைக்காக அமைச்சரின்

(10 ஆம் பக்கம் பார்க்க)



## ஒரு துப்பாக்கிச் சூட்டையேனும் மடுவில் படையினர் மேற்கொள்ளவில்லை

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தென்பகுதியிலுள்ள இலட்சக் கணக்கான தமிழ், சிங்கள மக்கள் போற்றி வணங்கும் மடுமாதாவின் புனித பிரதேசத்தில் இராணுவத்தினர் மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொள்வதாக உலகுக்குக் கூறி சர்வதேச ரீதியாக அனுதாபத்தைத் தேடிக் கொள்வதற்காகப் புலிகள் துணிச்சலான தந்திரோபாயங்களை மேற்கொண்டு வருகின்றார்கள்.

ஆனால் படையினர் புனிதப் பகுதியை நோக்கி ஒரு துப்பாக்கிச் சூட்டையேனும் நடத்தவில்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார். இது பற்றி அவர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஜெயராஜின் கொலைக்கு லூயிஸ் ஆர்பர் அம்மையார் கண்டனம்

(கொழும்பு)

பொதுமக்கள் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் மேற்கொள்ளப்படும் வன்முறைகள், சர்வதேச சட்டத்தை மீறும் செயற்பாடுகளாகும். இவை தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உள்ள சந்தர்ப்பத்தை பாதிப்படையச்செய்யும் என ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் லூயிஸ் ஆர்பர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே உள்ளிட்ட 15 பேர் பலியாவதற்கு காரணமாக அமைந்த தாக்குதல் சம்பவத்தை கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் சிப்பாய் பலி

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் நேற்றுக் காலை இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நல்லூர் கோவில் வீதியில் காவலில் ஈடுபட்டிருந்தபோது நேற்றுக் காலை 8.15 மணியளவில் அவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அப் பகுதியில் பொதுமக்களின் நடமாட்டம் அதிகமாகக் காணப்பட்டபோது இத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் அவர் உடனடியாக பலாலிக்கு கொண்டு செல்லப்பட்ட போது உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-5)

## தமிழர் பகுதியில் உணவு நெருக்கடி ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கைத் தமிழர் பிரதேசங்களில் உணவு நெருக்கடி இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களை ஒருங்கிணைக்கும் அலுவலகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அலுவலகம் வெளியிட்டிருக்கும் ஆய்வின் தமிழ்ப் பகுதி வருமாறு,

நெல்விளைச்சலில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, உலகச் சந்தையில் உணவுப் பொருள்களுக்கான விலையுயர்வு ஆகியவற்றால் இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு அதிகரித்து வருவதாக ஐக்கிய நாடுகளின் உணவுத் துறை வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

20 மில்லியன் மக்களில் அரைவாசிப் பேர் மாத்திரமே குறைந்தபட்ச கலோரிகளான 2,030 கலோரிகளைத் தமது நாளாந்த உணவு வேளைகளின்போது பெற்றுக்கொள்கின்றனர் என்று இலங்கை அரசாங்கத்தினால் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இலங்கையைச் (10 ஆம் பக்கம் பார்க்க)

மிதிவெடி விழிப்புணர்வு தினம் : ஏப்ரல் 1 - 14

மிதிவெடிகள், வெடிபொருட்கள் அழகானவை - ஆனால் உயிராபத்தானவை.

'சர்வோதயம்' 'யுனிசெவ்'

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மருத்துவ வளங்கள் முடக்கப்பட்டுள்ளதால் சுகாதார சேவைகள் இயங்கமுடியாத நிலை

## விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் போதுமான மருத்துவ வளங்கள் இல்லை என்று அண்மையில் சுகாதார சேவையினர் தெரிவித்திருந்தனர்.

ஓமந்தை மற்றும் வவுனியா சோதனைச் சாவடிக்ளில் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சினால் மருத்துவ வளங்கள் முடக்கப்படுவதால் இந்த இரு மாவட்டங்களிலும் சுகாதார சேவைகள் இயங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என விடுதலைப்புலிகளின் மனித உரிமைகள் விவகாரங்களுக்கான பேச்சாளர் நவரூபன் செல்வி குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை வருமாறு;

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்குரிய இந்த ஆண்டின் முதல் பகுதிக்குரிய மருந்துகள் இன்னமும் அனுப்பி வைக்கப்படவில்லை.

ஜனவரி மாதத்தின் தொடக்க காலப் பகுதியிலே வந்து சேர வேண்டிய மருந்துகள் ஆண்டின் காற்பகுதி நிறைவடைந்துள்ள மார்ச் மாதமாகியும் வந்து சேரவில்லை.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்காக வவுனியாவில் அவை முடக்கி வைக்கப்பட்டுள்ளது. பொது நோய்களுக்குரிய அடிப்படை மருந்துகள் கிடைக்காமல் நோயாளர்கள் கடும் ஆபத்தில் உள்ளனர்.

முல்லைத்தீவு சுகாதார சேவைக்குரிய எரிபொருள் ஒதுக்கீடு குறைக்கப்பட்டிருக்கிறது.

போர் நிறுத்த ஒப்பந்த காலத்தில் தேவைக்குரிய அளவு எரிபொருட்கள் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒவ்வொரு கட்டமாக அதன் அளவை குறைத்துள்ளது அரசு.

முல்லைத்தீவு சுகாதார சேவைகளுக்கு மாதாந்தம் ஆகக் குறைந்த பட்சம் 14 ஆயிரம் லீற்றர் எரிபொருள் தேவை.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை, மாவட்டத்தில் உள்ள 2 துணை மருத்துவமனைகள், 6 மருந்தகங்கள் இந்த எரிபொருளில்தான் இயங்கவேண்டியுள்ளது.

ஆபத்தான நிலைமைகளில் நோயாளர்களை காவு வாகனங்களின் மூலமாக வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லவும் இந்த எரிபொருளே பயன்படுத்தப்படுகிறது.

இப்படியான அவசர தேவைகள் உள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகளுக்கு 2ஆயிரம் லீற்றர் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயற்பாடுகளால் உருவாக்கப்படும் மனித பேரவலங்களுடன் வன்னிப் பிரதேச சுகாதார சேவைகள் போராடி வருகிறது.

சிறார் உரிமைகள் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் சரத்து 24-இல் எந்த ஒரு சிறாரும் தமது சுகாதார சேவைகளை பெற்றுக்கொள்வதிலிருந்து ஒதுக்கப்படக்கூடாது என்பதனை அரசுத்தரப்புக்கள் உறுதிசெய்ய கடுமையாக முயற்சிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்படியானால், இலங்கைத்தீவில் அரசாங்கத்தினால் தென்பகுதி சிறார்களுக்கு மட்டுமே சுகாதார சேவைகள் உறுதிப்படுத்தப்பட்டு தமிழ்ச்சிறார்களுக்கு அடிப்படை வசதிகள் கூட மறுக்கப்பட்டுள்ளதா?

இத்தகைய பாரிய மனித உரிமை மீறலை அனைத்துலக சமூகம் கவனிக்கத்தவறுகிறதா? என்று அதில் செல்வி கேள்வி எழுப்பியுள்ளார். (ஏ-5)

## கொமர்ஷல் வங்கியின் கைவிசேடம்

(யாழ்ப்பாணம்)

கொமர்ஷல் வங்கியின் வாடிக்கையாளர் சேவைகள் இன்று காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரையும் நடைபெறும் என உதவிப் பொது முகாமையாளர் ஆர்.கஜரூபன் தெரிவித்தார்.

அத்துடன் கைவிசேடத்தை முன்னிட்டு எதிர்வரும் 14ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 4.00 மணிவரையும் வங்கி திறந்திருக்கும் எனவும் அதன் போது கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுவதுடன் புதிய கணக்குகள் ஆரம்பிக்க முடியும் எனவும் அவர் கூறினார். இதேவேளை எதிர்வரும் 18 ஆம் திகதி கொமர்ஷல் வங்கியின் சேவைகள் இடம்பெற மாட்டாது எனவும் அவர் மேலும் கூறினார். (ச)

## நூல் வெளியீட்டு விழா

சட்டத்தரணி ரி.எம்.அன்ரனிப்பிள்ளையின் "SPOKEN ENGLISH & EASY GRAMMAR" புத்தக வெளியீடு நாளை சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ்.டேவிற் வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற கலைக்கோட்ட அழகியற் கல்லூரி மண்டபத்தில், அதிபர் திருமதி பி.எப்.சின்னத்துரையின் தலைமையில் நடைபெறும்.

நூல் வெளியீட்டுரையை ஆசிரியை திருமதி இ.ஞானப்பொன்ராஜா நிகழ்த்துவார். முதற்பிரதியை, உயர் தொழில்நுட்பவியல் நிறுவனப் பணிப்பாளர் ஆர்.ஏ.திலகரட்ணமும் சிறப்புப் பிரதிகளை யாழ்ப்பாணம் பினான்ஸ் கொம்பனி முகாமையாளர் முத்தையா ரகுநாதன், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் தி. யோண்குயின்ரஸ் மற்றும் நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர் மருசலீன் அன்ரனி ஆகியோரும் பெற்றுக்கொள்ளவுள்ளனர். (அ)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் கொள்ளையர்களின் தாக்குதலில் காயம்

(வவுனியா)

வவுனியா பூவரசங்குளத்தில் நேற்று அதிகாலை வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் பெறுமதி மிக்க நகைகளைக் கொள்ளையடித்ததுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேரை கூரிய ஆயுதங்களால் தாக்கிப்படுகாயப்படுத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

பூவரசங்குளத்தில் உள்ள ஒரு வீட்டுக்குள் அதிகாலை 1.30 மணியளவில் அத்துமீறி நுழைந்த நால்வர் அடங்கிய கொள்ளையர்கள் குழு அங்கிருந்தவர்களை கடுமையாக தாக்கியிருப்பதாக வவுனியா பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

தேவராசா, லலிதாதேவி, கிருஸ்ணராஜ், சர்மிளா, தர்மினி ஆகியோரே கொள்ளையர்களின் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளனர். அவர்கள் அனைவரும் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-5)

## மீண்டும் சூரியன் எப்.எம்

(கொழும்பு)

சூரியன் எப்.எம்.வானொலி இம்மாதம் 15 ஆம் திக்தி முதல் தனது சேவையை ஆரம்பிக்கவுள்ளதாக ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ரேனோய் சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி காலை 6 மணிமுதல், முன்னர் ஒலிபரப்பாகி வந்த அதே அலைவரிசையிலேயே தொடர்ந்தும் சூரியன் எப்.எம்.இனைக் கேட்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவற்றில் ஹிரு எப்.எம், கோல்ட் எப்.எம், சூரியன் எப்.எம் ஆகிய மூன்று அலைவரிசைகளுக்கு மாத்திரம் தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் தெற்கில் 103.2 அலைவரிசையிலும் கண்டி மற்றும் வடக்கு கிழக்கில் 97.3 அலைவரிசையிலும் யாழ்ப்பாணத்தில் 93 அலைவரிசையிலும் நாடு முழுவதும் 97.9 அலைவரிசையிலும் சூரியன் எப்.எம் ஒலிக்கும் என அவர் மேலும் கூறினார். (ச-5)

## வன்னிக் களமுனையில் 8 படையினர் காயம்

(கொழும்பு)

வன்னிக்களமுனையில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களில் 8 படையினர் காயமடைந்துள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

மன்னார் களமுனையில் மிதிவெடிகளில் சிக்கி நேற்று முன்தினம் 3 படையினர் காயமடைந்துள்ளனர்.

மணலாறு கிரிபன் வெவப் பகுதியில் கடந்த 8ஆம் திகதி பிற்பகல் 12.10 மணியளவில் இடம்பெற்ற மோதலில் இரண்டு படையினர் காயமடைந்துள்ளனர்.

மன்னார் மடுப்பகுதியில் கடந்த 8ஆம் திகதி பிற்பகல் 2.05 மணியளவில் விடுதலைப் புலிகளின் மிதிவெடியில் சிக்கி 2 படையினர் காயமடைந்துள்ளனர்.

மடுக்களமுனையில் பிற்பகல் 1.45 மணியளவில் இடம்பெற்ற மோதலில் படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்துள்ளார் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## சர்வதாரி வருடப்பிறப்பு

**புதுவருடம் பிறக்கும் நேரம்**

சர்வதாரி வருடம் சித்திரை முதலாம் திகதி (13.04.2008) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நாடி 27 விநாடி 05 (மணி 4.55) பூர்வபக்ஷ நவமி திதியில், பூச நட்சத்திரத்தின் முதலாம் பாதத்தில் திருதி நாமயோகத்தில், பாலவக்கரணத்தில், கன்னி லக்கினத்தில் மீன நவாம்சத்தில் இப் புதிய சர்வதாரி வருடம் பிறக்கின்றது.

**புண்ணிய காலம்**

அன்று பிற்பகல் நாடி 17 விநாடி 05 (மணி 12.55) முதல் அன்று முன்னிரவு நாடி 37 விநாடி 05 (மணி 8.55) வரை விஷு புண்ணிய காலமாகும்.

**ஸ்நான முறை**

இப்புண்ணிய காலத்தில் யாவரும் மருத்துநீர் தேய்த்து சிரசில் ஆலிலையும், காலில் இலவமிலையும் வைத்து ஸ்நானம் செய்தல் வேண்டும்.

**ஆடைகள்**

சிவந்த பட்டாடையாயினும், சிவப்பு பச்சைக் கரையமைந்த புதிய ஆடையாயினும் அணிய வேண்டும்.

**ஆபரணம்**

மாணிக்கம், மரகதம் இழைத்த ஆபரணம் அணிய வேண்டும்.

**வழிபாடு**

விக்னேசுவரர் முதலிய குல தெய்வ வழிபாடு செய்து, சூரியனுக்கு பொங்கல், பூசைகள் செய்து குரு, பெற்றோர் முதலிய பெரியோரை வணங்கி அவர்களின் ஆசி பெறுதல் வேண்டும்.

**உண்டிகள்**

அறுசுவைகளுடன் சுக்கு, திற்பலி மிளகு என்னும் திரிகடுகும் அப்ப வர்க்கமும் சேர்த்தருந்தி தாம்பூலம் தரித்து, கண்ணாடி, தீபம் நிறைகுடம் முதலிய மங்களப் பொருட்களைத் தரிசனம் செய்ய வேண்டும்.

**தோஷ நட்சத்திரங்கள்**

புனர்பூசம் 4ஆம் கால், பூசம், ஆயிலியம், அனுஷம், மூலம், பூராடம், உத்தராடம் முதலாம் கால், உத்திரட்டாதி.

**கைவிசேஷம்**

திங்கட்கிழமை (14.04.2008) பிற்பகல் 2.18 முதல் 4.10 மணிவரையும், பிற்பகல் 6.20 முதல் 7.30 மணிவரை.

**வருடப்பிறப்பன்று செய்ய வேண்டியவை**

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நித்திய நைமித்திய கர்மானுட்டானங்களை முடித்து, தத்தம் வீடுகளிலே சூரியனுக்கு பொங்கல் பூசை வழிபாடு செய்து மங்களகரமாக வாழக்கடவர்.

*ஆதாரம்:வாக்கிய பஞ்சாங்கம்*

## க.பொ.த(சா/த)பரீட்சை பெறுபேறுகள் - 2007

**வட இந்து மகளிர் கல்லூரி**

சி.சஜிந்தா (10ஏ); க.மாலினி (10ஏ); ஞா.தேவகி (10ஏ); த.தர்சினி (9ஏ,பி); வ.கம்சவாசினி (9ஏ,பி); கோ.அனுசியா (9ஏ,பி); பா.கங்கா (8ஏ,பி) ;ந.லக்ஸ்சாந்தினி (8ஏ,2பி).

கு.நிதர்சினி (7ஏ ,2பி,சி); ம.காயத்திரி (7ஏ, 2பி,சி); வ.வகினி (7ஏ,2பி,சி); அ.மதுரா (7ஏ, 2பி,சி); வி.விஜிதா (6ஏ,2பி,2சி); க.ஸ்ரீகிருஷ்ணவாகினி(6ஏ,பி,3சி); கு.நிலாநிதி (6ஏ,பி,3சி); தி.உதயநிதி (6ஏ,பி,2சி,எஸ்); வே.யோகவேணி (5ஏ,3பி,2சி); பா.றீதிகா (5ஏ,2பி,2சி).

பா.ராதிகா (5ஏ,2பி,2சி); வ.சந்திரிகா (5ஏ, 2பி,3சி); வி.இ.நிசாந்தினி (5ஏ,2பி,3சி); பா.ரோகிணி (5ஏ,3பி,2சி); க.றொபின்தா (5ஏ, 4பி,சி).

**யாழ்ப்பாணக் கல்லூரி**

செ.தர்சிகா (10ஏ); து.வைஷ்ணவி (10ஏ) தி.மோகலா (10ஏ); சு.அஜிதரன் (9ஏ,பி); ப.கிசோஜினி (8ஏ,2பி); ஜெ.றோ.தேவசகாயம் (8ஏ,பி,சி); ப.டர்சன் (7ஏ,3பி); பு.தபோகரன் (7ஏ,2பி,சி); தி.சேந்தன் (6ஏ,4பி); ரூ.ரூபனா (6ஏ,4பி); ய.சுந்தர்ராம் (6ஏ,3பி,எஸ்).

நி.உதயசூரியன் (6ஏ,3பி,சி); சா.திருமகள் (6ஏ,3பி,சி); ச.கயமினி (6ஏ,3பி,சி); ப.திலக்சனா (6ஏ,2பி,2சி); யோ.சிந்துஜா (6ஏ, 2பி,சி).

மு.கம்சத்வனி (5ஏ,4பி,எஸ்); செ.தயாளன் (5ஏ,4பி,சி); தி.ஜீவிதா (5ஏ,3பி,சி,எஸ்); ப.வேணுகரன் (4ஏ,பி,5சி); வே.பவபரன் (4ஏ,பி,4சி,); வி.இ.ஜோர்ஜ் டெனஸ்ரன் (3ஏ, 2பி,5சி).

வ.கஜந்தினி (3ஏ,6பி,சி); ச.தனானந் (3ஏ,5பி,2சி); இ.துஸ்யந்தி (3ஏ,5பி,2சி); செ.ஜான்சன் (3ஏ,4சி,3எஸ்); நி.பிரசாந்தன் (3ஏ,4பி,2சி,எஸ்); சூ.சுஜனி (3ஏ,3பி,3சி, எஸ்); ப.திலகராஜன் (3ஏ,3பி,3சி).

ப.மிருனா (3ஏ,3பி,2சி,2எஸ்); சி.விஜிதரன் (3ஏ,2பி,4சி,எஸ்); தே.தமயந்தி (3ஏ,2பி, 4சி,எஸ்) ;த.முரளிவாசன்(3ஏ.பி.3சி.2எஸ்): இ.செல்வின்லொய்ட் (3ஏ,பி,5சி,எஸ்).

**யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**

தெ.பிரேமினி (10ஏ); ப.நிஷானி (9ஏ,பி); ம.அனுஜா (9ஏ,சி); கி.அபர்னா (8ஏ,2பி), சி.சிந்துஜா (8ஏ,2பி); அ.அகல்யா (7ஏ,2பி, சி); ஸ்ரீ.சரண்யா (7ஏ,3பி); ஜே.அகிம்ஷா (7ஏ, பி,2சி); க.வளர்மதி (7ஏ,பி,2சி) ;சி.ஜெயராணி (6ஏ,2பி,சி,எஸ்).

யோ.சஜிதா (5ஏ,4பி,சி); செ.அருளினி (5ஏ,4பி,சி); அ.பிரசாந்தினி (5ஏ,2பி,3சி); சு.தர்சிகா (5ஏ,2பி,2சி,எஸ்);சு.அனுப்பிரியா (5ஏ,பி,2சி,எஸ்); வ.வசந்தா (5ஏ,பி,4சி).

**வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயம்**

சி.சரண்ராஜ் (5ஏ,4பி,சி); ஜெ.தயானந் (3ஏ,4பி,3சி); த.சிவகுமார் (2ஏ,3பி,3சி, 2எஸ்); ச.வசிகரன் (2ஏ,2பி,5சி,எஸ்);மு.சுகந்தினி (2ஏ,6சி,2எஸ்);ச.கலாதாஸன் (ஏ,2பி, 3சி,3எஸ்); ர.தர்சினி (ஏ,பி,2சி,5எஸ்); சி.துசிதா (பி,3சி,4எஸ்).

**நல்லூர் இந்து தமிழ் மகளிர் கல்லூரி (மங்கையற்கரசி வித்தியாலயம்)**

பா.ஹேமாஞ்சனி (5ஏ,2பி,சி,2எஸ்); யோ.துஸ்யந்தினி (4ஏ,2பி,சி,3எஸ்); த.வேணுகா (3ஏ,3பி,2சி,2எஸ்); நி.பிரதீபா (3ஏ,3சி,எஸ்);ந.ஜெயநிசாந்தினி (2ஏ,2பி,3சி, 3எஸ்); ப.தர்சிகா (2ஏ,பி,4சி,2எஸ்); த.யஸ்ரிகா (ஏ,பி,5சி,3எஸ்); ஜெ.வினோஜா (ஏ,பி, 4சி,3எஸ்); ச.கிந்துசா (ஏ,பி,2சி,3எஸ்): சா.ஜனார்த்தனி (ஏ,பி,சி,4எஸ்); பா.மயூரதி (ஏ,4சி,2எஸ்); சு.பிரதீபா (பி,4சி,எஸ்); யோ.தீபிகா (பி,2சி,4எஸ்). (ச)

# இன்று ஒரு தகவல்

## என்ன எதிர்பார்க்கிறார்கள்?

எனது நண்பரின் உறவினர் ஒருவர் மிகவும் பொறுப்பாகவும் கவனமாகவும் செயல்பட வேண்டிய பதவிக்கான "நேர்காணலுக்கு" சென்றிருந்தார். அவர் எழுத்துப் பரீட்சையில் ஏராளமான மதிப்பெண்களைப் பெற்றிருந்தார். நேர்காணலில் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சரியான பதில்களைத்தான் சொன்னார். இருந்தாலும் அந்த நேர்முகத் தேர்விலே அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை!

அதற்கு காரணம் என்ன என்று விசாரித்தபோது அந்த நேர்முகத் தேர்விலே அவர் நடந்துகொண்ட விதத்திலே இரண்டு தவறுகள் நடந்துவிட்டதாகத் தெரிந்தது. ஒன்று அவர் கள் கேட்ட கேள்வியை முடிப்பதற்கு முன்னரே இவர் பதில் சொல்ல ஆரம்பித்துவிட்டாராம். இரண்டாவதாக இவர் நாற் காலியிலே தாராளமாக இயல்பாக உட்காராமல் நாற்காலி முனையிலே உட்கார்ந்திருந்தாராம். இந்த இரண்டுவிதமான செயற்பாடுகளும் அவர் அவசரப்படுகிறார், பதற்றப்படுகிறவர் என்பதற்கான அடையாளங்களாம். பார்க்கப்போகிற வேலைக்கு அவசரம், பதற்றம் இரண்டும் இருக்கவே கூடா தாம். அதனாலே தான் அவருக்கு அந்த வேலை கிடைக்கவில்லை.

வேலை கொடுப்பவர்கள் நம்மிடமிருந்து எதை எதிர்பார்க்கிறார்கள் என்பதை தெரிந்து வைத்திருப்பது நல் லது. முதலிலே மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் திறமை- அதாவது Ability to Communicate அவர்கள் நினைப்பதை அழகாகத் தொகுத்து வகைப்படுத்திச் சொல் லத் தெரிகிறதா என்று பார்ப்பார்கள். உங்கள் திட்டங்களை அடுத்தவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்திலே வெளிப்படுத்த உங்களால் முடியுமா என்று பார்ப்பார்கள். அதனால் குழப்பமில்லாமல் சிந்திக்க வேண்டும். குழப்பமில்லாமல் பேச வேண்டும்.

இரண்டாவது விஷயம்-புத்திசாலித்தனம்! அதாவது-Intelligence ஏற்றுக்கொள்ளப் போகும் வேலையை நல்ல விதமாகச் செய்ய உங்களால் முடியுமா? அதை எந்தெந்த வழியிலே செய்யலாமென்பதை உங்களால் தீர்மானிக்க முடியுமா? அந்த வேலைக்கான புதுப்புது யோசனைகளை உங்களால் சொல்ல முடியுமா? என்று பார்ப்பார்கள்.

மூன்றாவது-தன்னம்பிக்கை! அதாவது Self Confidence உங்களுக்கு அது உண்டா என்று பார்ப்பார்கள் எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்க வேண்டும். எப் படிப்பட்ட மனிதர்களையும் சமாளிக்கிற தைரியம் வேண்டும்... அடுத்தவர்களை நமக்குச் சாதகமாக திருப்பக்கூடிய தன்னம்பிக்கை வேண்டும்!

நாலாவது பொறுப்புகளை முன்வந்து ஏற்றுக்கொள்ளுதல்- Willingness to Accept Responsibility பொறுப்புகளிலிருந்து நழுவிப் போக ஆசைப்படாமல் செய்து முடிக்க வேண்டும். ஐந்தாவது-முன்வருதல்! Initiative வேலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்குத்தக்க நடவடிக்கையை தயங்காமல் எடுக்க முன்வர வேண்டும். அதாவது-தலைமைத்துவம் ! Leadership நாலு பேருக்குத் தலைமை தாங்கி நல்ல விதத்திலே நடத்தத் தெரியுமா? ஏழாவது கற்பனைத் திறன் !- Imagination சில பிரச்சினைகள் வரக்கூடுமென்று முன்கூட்டியே யோசித்து அதற் குத் தகுந்த மாதிரி நடவடிக்கை எடுக்கிற திறமை உண்டா என்று பார்ப்பார்கள். எட்டாவது-வளைந்து கொடுத்தல்! Flexibility. சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி மற்றவர்களுக்குத் தகுந்த மாதிரி அனுசரித்து நடக்கத் தெரியுதா என்று பார்ப்பார்கள். அடுத்தது- திறமைகளை வெளிக்கொணரும் திறமை Inter-personal Skills. அடுத்தவர்களிடம் இருக் கிற திறமையைக் கண்டுபிடித்து அதை நல்ல விதத்திலே ஊக்கப்படுத்திப் பயன்படுத்தத் தெரியுமா என்று பார்ப் பார் கள்.

அடுத்து சுய அறிவு! Self Knowledge அடுத்தவர்கள் நம்மைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை நம் மால் புரிந்துகொள்ளமுடியுதா என்பது முக்கியம். அடுத்தது போட்டி மனப்பான்மை Competiveness அடுத்தவர் களை ஒப்பிட்டுப் பார்த்து அதைவிட ஒருபடி மேலே வர வேண்டும் என்கிற குணம் வேண்டும். அடுத்தது குறிக்கோளை வெல் லுதல்!- Goal Achievement குறிக்கோளை சவாலாக எடுத்துக்கொண்டு அதை அடைய வேண்டும். இவை தவிர வேறுபட்ட திறமைகள் Vocational Skills பதவிக்கு வேண்டிய திறமைகள் தவிர மற்றத் திறமைகள்ஏதாவது உண்டா என்பதும் முக்கியம் நமக்கு வேலை கொடுக்க நினைப்பவர்கள் நம்மிடமிருந்து இவ்வளவையும் எதிர்பார்ப்பார்கள். அதற்குத் தகுந்த மாதிரி நம்மை நாமே தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

எனக்குத் தெரிந்த ஒருவர் நேர்காணல் ஒன்றுக்கு போய் வந்தார். எப்படி இருந்தது என விசாரித்தேன். "நான் போனேன்... அவர் கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் அவர் எதிர்பார்த்தது மாதிரியே பதில் சொன்னேன். கடைசியாக நான்எதிர்பார்த்திராதஒருதகவலையும்சொன்னார்" என் றான். "என்ன ? என்று கேட்டேன். அவரும் என்னைப் போல நேர்காணலுக்கு வந்தவர்தானாம்! சும்மா என்னைக் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தாராம்!

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# எரிவாயு, பால்மாவின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்படவுள்ளது?

(கொழும்பு)

எரிவாயு கம்பனிகளும் பால்மா இறக்குமதியாளர்களும் எரிவாயுவினதும் பால்மாவினதும் விலைகளை அதிகரிப்பதற்கு நுகர்வோர் அதிகார சபையிடம் அனுமதி கோரியுள்ளதாக தெரியவருகிறது.

பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் காணப்பட்ட எரிபொருள் விலைகளை அடிப்படையாகக் கொண்டு விலைகள் மறுபரிசீலனைக்கான விண்ணப்பத்தினை கடந்த திங்கட்கிழமை நுகர்வோர் அதிகார சபையிடம் சமர்ப்பித்துள்ளதாக லாப் கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளர் திலக் டீ சில்வா தெரிவித்துள்ளார்.

இரு மாதங்களுக்கொருதடவை நுகர்வோர் அதிகாரசபையினால் விலைகள் மறுபரிசீலிக்கப்படுவதாகவும் அதன் பொருட்டே தாம் இந்தவேண்டுகோளை முன்வைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் மே மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ள விலைகளின் மறுபரிசீலனைக்காக தமது நிறுவனமும் விண்ணப்பம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளதாக கெல் எரிவாயு கம்பனியின் நிதிப் பணிப்பாளர் ரிமோ சால்டின் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் பால்மாவை இறக்குமதி செய்யும் கம்பனிகளும் 400 கிராம் பால்மா பக்கற்றின் விலையை 20 ரூபாவினால் அதிகரிப்பதற்கான விண்ணப்பத்தினை நுகர்வோர் அதிகாரசபையிடம் அனுப்பி வைத்துள்ளன.

இதன்படி தற்போது 275 ரூபாவுக்கு விற்கப்படும் 400 கிராம் பால்மா பக்கற் ஒன்றின் விலையை 295 ரூபாவாக அதிகரிப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

இந்த வேண்டுகோளை இலங்கையில் பால்மாவை இறக்குமதி செய்யும் கம்பனிகள் அனைத்தும் இணைந்தே விடுத்துள்ளன. (ச-5)

# தொடரும் யுத்தத்தினால் சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிப்பு

## சர்வதேச மன்னிப்புச் சபை கவலை

(கொழும்பு)

இலங்கையில் மோதல்கள் இடம் பெறும் மற்றும் வறிய பகுதிகளில் வாழும் சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக வெளியான அறிக்கை குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை கவலை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் வடக்கில் போசாக்கின்மையால் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் பாதிக்கப்படுவதாக லண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் மனித நேய அமைப்பொன்று கடந்த வாரம் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது.

இலங்கையில் தொடர்ந்துவரும் மோதல்கள் மனித விலைகளை அதிகமாகக் கொடுத்துவிட்டது. மோதல்கள் இடம்பெறும் மாவட்டங்களில் மனிதாபிமான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பாரிய சிக்கல்கள் எதிர்நோக்கப்படுகின்றன என்பதை எமது அமைப்பு அறிந்து கொண்டுள்ளது.

இதனால் அந்தப் பகுதிகளிலுள்ள சிறுவர்களுக்கான மனித நேய உதவிகளை வழங்குவதற்கு மனிதாபிமான அமைப்புக்களால் இயலாது உள்ளது என சர்வதேச மன்னிப்புச் சபையின் இலங்கை மற்றும் நேபாளத்துக்கான சர்வதேச ஆய்வாளர் ஜெலான்டாபொஸ்டர் கொழும்பு ஆங்கில ஊடக மொன்றிடம் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் குறிப்பாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பகுதிகளில் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் போதியளவு போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாக மனிதநேய அமைப்பு வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. (அ-5)

# இராசிபலன்

11.04.2008
(பங்குனி 29, வெள்ளிக்கிழமை)
ஷஷ்டி முன்னிரவு 08.12 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 02.21 மணி வரை
இராகுகாலம் 10.36-12.06 மணிவரை
சுபநேரம் 06.06-07.36 மணிவரை
ஷஷ்டி விரதம்

| | |
|---|---|
| மேடம் | சுபநிகழ்வு, கடினமுயற்சி, நல்ல தகவல், தொழில் விருத்தி. |
| இடபம் | புதிய திட்டமிடல், ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு. |
| மிதுனம் | வீண்தொல்லை, முயற்சி தடங்கல், வாகனபயம், உடல்வியாதி. |
| கடகம் | அபூர்வ சந்திப்பு, எடுத்தகாரியம் கைகூடும், பிரயாண நன்மை. |
| சிங்கம் | சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், போசனநன்மை, பணவருவாய். |
| கன்னி | காரிய இடையூறு, சிறுவியாதி, புதிய விடயம், குடும்பக்கவலை. |
| துலாம் | ரோகநிலை, தன்னம்பிக்கைக் குறைவு, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, புதிய பொருள்சேர்க்கை. |
| தனுசு | தொழில் மந்தநிலை, பணவிரயம், காரியதாமதம், விவாதம். |
| மகரம் | ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், நண்பர்கள் உதவி, போசனநன்மை. |
| கும்பம் | அமைதிக்குறைவு, வேலைச் சுமை, பிதாசிந்தை, கோபப்படுதல். |
| மீனம் | தெய்வசிந்தை, பெருமையடைதல், மனமகிழ்ச்சி. நண்பர்கள் சந்திப்பு. |

வ ள வன்




பாலகணபதி துணை

அல்வாய் சாமணந்தறை

ஆலடிப்பிள்ளையார் கோவில் மஹோற்சவம்

1ஆம் நாள் கொடியேற்றத் திருவிழா


11.04.2008

சீர்மேவும் கல்விதரும் நல்லறிஞர் சிறப்புறும்
சேர் புகழும் சைவநெறி செழித்திடவே - ஊரல்வாய்
பேர் பாடும் ஆலடிப்பிள்ளையென போற்றுமவன் பதியில்
பாரோங்க கொடியேறுது பரவசமுறவே

ஓமெனும் பிரவணத்தின் ஓங்காரரூபனே
ஒப்பிலாத் தெய்வமாய் நின்றிருளோங்குவாய்
பாம்பினை கழுத்தில் மாலைகொண்டான்
சிவனுமை அகர உகர உட்பொருள் நாயகனே
தேமாங்கனி கைப்பெற அம்மை அப்பனுலகென்று
வலமாகி தத்துவம் செப்பிய கணபதியே
கோமயம் மங்களமஞ்சள் அறுகிலுறையும்
அம்புஜ மலரமரும் ஐங்கரனை தொழுவோமே

அல்வாயூர் சி.சிவநேசன்

(1052)

முன்னாள் யாழ்.மேயர் S.S.நவரட்ணம் நினைவாக கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி. மாணவர்களுக்கு பாதணிகள், புத்தகப்பை என்பன வழங்கப்பட்டன. வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியர் S.சிவகுமார் மாணவர் ஒருவருக்கு புத்தகப்பை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## விசேட செயலமர்வு

(அல்வாய்)


வடமராட்சி கல்வி வலயத்தில் தரம் 5 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் பரீட்சைக்குரிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு, புலோலி மெ.மி.த.க பாடசாலையில் நடைபெற உள்ளதென வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-6)

## மீன்பிடி அனுமதி இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடற்கரை இராணுவத்தினரால் 126 மீனவர்களுடைய மீன் பிடிப்பதற்கான அனுமதி அட்டைகள் மீனவர்களிடம் இருந்து மீளப் பெற்றுள்ளதாக குருநகர் கடற்றொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

மீன்பிடி கடல் எல்லையுடன் தாண்டிச் சென்று மீன்பிடித்தமையால் 126 மீனவர்களது அனுமதியை மீளப் பெற்றதாக இராணுவம் தெரிவித்ததாக சங்கப் பிரதிநிதி தெரிவித்துள்ளார். (ஓ)




## யாழ்.செய்திகள்

## அனுமதி இன்றி ஐஸ்கிறீம் விற்பனைக்குத் தடை

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதிப் பத்திரம் இன்றி நடமாடும் ஐஸ்கிறீம் விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

சுகாதாரத்திற்கு ஊறுவிளைவிக்கும் வகையில் அனுமதிப்பத்திரம் இல்லாது விற்பனைசெய்யப்படுவதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் தெரிவிக்கப்படுகிறது. இந்த வகையில் எதிர்வரும் காலங்களில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் விற்பனை செய்யும் ஐஸ்கிறீம் விற்பனை உரிமையாளர்கள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-134)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் ஐ.கமலநாதன் இம் மாதம் 24ஆம் திகதியுடன் ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெறுவதால் அவருக்கு மணிவிழா கொண்டாடுவது சம்பந்தமான கலந்துரையாடலுக்காக தென்மராட்சியில் அவரிடம் கற்ற மாணவர்களை நாளை சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஒன்றுகூடுமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (ஓ)

## ஆனைக்கோட்டை பொதுநூலக நடமாடும் சேவை

உலக புத்தக தினம் ஏப்ரல் 23 ஐ முன்னிட்டு மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் வலி.தென்மேற்கு பிரதேச சபை,மானிப்பாய் கிராம ஆனைக்கோட்டை உப அலுவலக பொதுநூலகம், நடமாடும் நூலக சேவையினை கடந்த வாரங்களில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம், ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலை,ஆனைக்கோட்டை புனித அன்னம்மாள் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் பொறுப்பதிகாரி எஸ்.சந்திரமவுலி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நூலகர் எம்.டபிள்யூ. குணாளன், நூலக உதவியாளர்களான என். நரேந்திரன், சா.ந.கெயின்சாள்ஸ் மற்றும் அலுவலக ஊழியர்கள் பலரும் பங்குபற்றினர். இந்த நடமாடும் நூலக சேவையின் மூலம் நூலகம் சம்பந்தமான விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தியதுடன் நூலகத்தின் பயன்பாடு பற்றி அவர்கள் உணரக் கூடியதாகவும் இருந்தது.

மேலும் இந்த செயற்பாடு பற்றி மேற்படி பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் இவ்வாறான செயற்பாடுகள் இனிவரும் காலங்களிலும் முன்னெடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-34)

# மடுத்திருப்பதியில் அனர்த்தம் நீங்கி அமைதி ஏற்பட வழிபடுவோம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் புகழ்மிக்க மடுத் திருப்பதி இலங்கை வாழ் எல்லா மக்களின் யாத்திரை ஸ்தலமாகவும், போர்ச் சூழலில் அகதிகளுக்கான புகலிடமாகவும் இருந்து வந்துள்ளதை நாம் யாவரும் அறிவோம். தற்போது இது போர் பிரதேசமாக மாற்றப்பட்டு, கட்டடங்கள் சேதமடைந்து யுத்தப் பிரதேசமாக மாறியுள்ளது. இதனால் மன்னார் மறைமாவட்ட மக்களும் ஆயரும் குருக்களும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளார்கள். இது எம்மையும் கவலைக்குள்ளாக்கியுள்ளது.

இவர்களுக்கு எமது தோழமையையும் கூட்டொருமை யையும் தெரிவிக்குமுகமாக இம்மாதம் 7 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று யாழ். ஆயர் இல் லத்தில் யாழ்.மறை மாவட்ட குருக்கள் ஒன்றிய அவசரக் கூட்டம் இடம்பெற்றது. இக்கூட்டத்தில்,

மன்னார் ஆயருக்கும் குருக் களுக்கும் தோழமைச் செய்தி அனுப்புதல், யுத்தத்தில் ஈடுபடும் இரு தரப்பினருக்கும் போரை நிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்தல், எல்லாப் பங்குகளிலும் நிறுவனங்களிலும் மடுவில் ஏற்பட்ட போர் அனர்த்தம் நீங்க அமைதி வேண்டி வழிபாடு செய்தல் ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதற்கு நாளை மறுநாள் ஞாயிற்றுக் கிழமை மக்களுக்கு வசதியான நேரத்தில் வழிபாடு நடத்துதல் பொருத்தமானது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மறை மாவட்ட குருக்கள் ஒன்றியத் தலைவர் அருட்பணி ஞா.பிலேந்திரன் அறிவித்துள்ளார். (ஓ)

# ஜெய்ப்பூர் நிலையத்திற்கு ஐ.சி.ஆர்.சி உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள ஊனமுற்றோருக்கான செயற்கை அவயவங்கள் தயாரிக்கும் ஜெய்ப்பூர் நிலையத்திற்கு செயற்கை அவயவங்களையும் நடமாட உதவும் ஊன்றுகோல்களையும் ஐ.சி.ஆர்.சி வழங்கியது.

வெடிக்காத நிலையில் கைவிடப்பட்ட வெடிபொருட்கள் அல்லது கண்ணிவெடிகளினால் பாதிக்கப்பட்ட 15பேர் உள்ளடங்கலாக தமது அவயவங்களை இழந்த ஏறத்தாழ 30பேருமாக 40க்கும் அதிகமான நோயாளர்கள் இதனால் பயனடைந்தனர் என ஐ.சி.ஆர்.சியின் மாசிமாத கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில்,யாழ்ப்பாணத்திற்கு ஐ.சி.ஆர்.சியினால் மேற்கொள்ளப்பட்ட உதவி குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் மருத்துவ உதவிகளை பெற்றுக் கொண்ட 45 நோயாளர்களும் அவர்களுடன் நான்கு மருத்துவர்களும் பயணிகள் விமான சேவை மூலமாக யாழ்ப்பாணத்திற்கு திரும்புவதற்கான ஏற்பாட்டைச் செய்தது.

காங்கேசன்துறை, பளை, மயிலிட்டி ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களை அரவணைத்து வாழும் 830 குடும்பங்களுக்கு 100 தார்பொலின்கள், 105 சிறுவர்களுக்கான பொதிகள், 8 தெளிகருவிகள் 360க்கும்மேற்பட்ட சுகாதாரப் பொதிகள் ஆகியவை வழங்கப்பட்டன.

யாழ்.குடாநாட்டில் தேசிய நீர்வழங்கல் சபை தனது நீர் விநியோகத்தை மேம்படுத்து வதற்காக மின்சாரத்தில் இயங்கும் தண்ணீர் பம்பிகளும் 30பரல் குளோரினும் வழங்கப்பட்டன.

கோப்பாய் பிரதேசத்தில் 15 கழிவறைகள், ஒரு மலக்குழி, ஐந்து கிணறுகள் என்பன நிர்மாணிக்கப்பட்டும் அல்லது திருத்தியும் அமைக்கப்பட்டன என்றுள்ளது.

இதேவேளை சர்வதேச மனிதநேயச் சட்டங்கள் மற்றும் ஐ.சி.ஆர்.சியின் செயற்பணி பற்றிய கருத்தமர்வில் உயர்தர மாணவர்கள், அரச சார்பற்ற ஊழியர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் உள்ளடங்கலாக 700க்கும் மேற்பட்ட பொதுமக்களும் 250 இராணுவ அதிகாரிகள், 70 விசேட அதிரடிப்படையினர், 80 காவல்துறையினரும் கலந்து கொண்டிருந்தனர்.

இ.செ.ச.இன் 26 கிளைகளைச் சேர்ந்த அங்கத்தவர்களுக்கு அனர்த்த நிவாரண பணிகள், செஞ்சிலுவைச் செய்திகளை பகிரல் சேகரித்தல் முறைகள், செஞ்சிலுவை மற்றும் செம்பிறைகளின் கொள்கைகள் பற்றியவைகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன என ஐ.சி.ஆர்.சியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சட்டவிரோத மண் அகழ்வை தடுத்து நிறுத்தக் கோரிக்கை

(மானிப்பாய்)

மானிப்பாய் மேற்குப் பகுதியில் உள்ள தெணிவெளியில் சட்டவிரோத மண் அகழ்வு தினமும் இரவு பகலாகத் துணிகரமான முறையில் நடைபெறுகிறது.

அழிந்துபோகும் வயல் நிலங்களையும், பனை வளங்களையும் பாதுகாப்பதற்கு சட்டவிரோத மண் அகழ்வைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர் க.முதலியார் வலி.தென்மேற்கு பிரதேச செயலாளரையும் அரசாங்க அதிபரையும் கோரியுள்ளார்.

இந்த நிலைப்பாடு குறித்து விவசாய சம்மேளனத் தலைவர் அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள அவசர கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது,

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மானிப்பாய் மேற்குப் பகுதியில் உள்ள தெணி வெளியில கடந்த சில தினங்களாக சட்டவிரோதமான முறையில் இரவு பகலாக மண் அகழ்வு நடைபெறுகிறது.

இருபதிற்கும் அதிகமான உழவு இயந்திரங்கள் இதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒரு உழவு இயந்திரத்தில் ஏற்றும் மண் 6 ஆயிரம் ரூபா வீதம் மக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.இந்த சட்டவிரோத மண் அகழ்வதால் வயல் நிலங்களும் பனை வளங்களும் அழிவடையும் நிலை ஏற்பட்டுள் ளது.

அத்துடன் குடியிருப்புக் காணிகளும், வழுக்கையாற்றுப் பகுதியும் விவசாய வீதிகளும் சேதமாக்கப்பட்டு வருகின்றது. (அ-5)



சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தான அபிராமிப்பட்டர் தினத்தை முன்னிட்டு "சிவசக்தி ஞானாந்தம்" என்ற நூல் வெளியீட்டு விழாவில் நூல் ஆசிரியர் சைவப் புலவர் கு.சுமுகலிங்கம் ஜே.பி , அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபை தலைவர் சிவஸ்ரீ கிருபானந்தக் குருக்கள் கௌரவிப்பதையும் அருகில் ஆலய ஆதீன குருக்கள் சிவஸ்ரீ வீரபத்திரக் குருக்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:-சாவகச்சேரி நிருபர்)

## பேச்சுத் திறன் காண் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பாலர் கல்விக்கழக நிர்வாகத்திலுள்ள 14 ஞானக் குழந்தை இல்ல பாலர் பாடசாலைகள் இணைந்து வழங்கும் தேனென இனிக்கும் மழலை மொழியிலான பேச்சுத் திறன் காணும் வைபவம் இன்று காலை 8.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக பிரதிப் பிரதம ஒழுக்காற்று அதிகாரியும் தீவக லயன்ஸ் கழகத் தலைவருமான லயன் ஐ.கோ. சந்திரசேகரம்(ஜே.பி), தீவக லயன்ஸ் கழக அங்கத்துவப் பணிப்பாளரான லயன் சு. நித்தியானந்தன் (ஜே.பி) ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

6ஆம் திகதி நடைபெறவிருந்த இந்நிகழ்வு யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த.பஞ்சலிங்கத்தின் மறைவினால் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

## விளையாட்டு மைதானம் புனரமைப்பு

வேல்ட்விசன் நிதி உதவியுடன் குருநகர் பாடுமீன் விளையாட்டு மைதானம் புனரமைப்பு செய்யப்படுகிறது.

குருநகர் சீநோர் பகுதியில் அமைந்துள்ள இம் மைதான புனரமைப்பு அப் பகுதியில் உள்ள இராணுவத்தினர் அனுமதி அளித்தமையைத் தொடர்ந்து புனரமைப்பு பணி மும்முரமாக இடம்பெறுவதாக குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் தெரிவித்துள்ளது. (ஓ)

## வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக உறுப்பினர் தெரிவும்

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்தப் பொதுக்கூட்டம், கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். பத்திரிசியார் கல்லூரி கேட்போர் கூடத்தில், உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.கிளிபேட் அந்தோனிப்பிள்ளை பி.ஏயின் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் நிர்வாக சபை உறுப்பினர்களாக கீழ்க் காண்போர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் எஸ். கிளிபேட் அந்தனிப்பிள்ளை, செயலாளர் எம்.பிறான்சிஸ், பொருளாளர் ரி.நித்திலநாயகம், உபதலைவர்கள் கப்ரின் டி.ஏ.எம். குணசிங்கம் (ஜே.பி) பெனடிக்ற் ராதா, தர்மராஜா ஏ. சுறேந்திரன், தொய்வான் மரியதாஸ். (ஓ-110)

## பெண்கள் அணி சாதனை

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் 2008ம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகளில் குருநகர் பாடுமீன் விளையாட்டு கழக பெண்கள் அணி உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், கபடி, எல்லே ஆகிய போட்டிகளில் முதல் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது. (ஓ)

## மஹோற்சவம்

ஆனைக்கோட்டை உயரப்புலம் அருள்மிகு ஸ்ரீ உத்துங்க விநாயகர் திருக்கோவில் மஹோற்சவ பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

திருவிழாவில் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 19ஆம்திகதி சனிக்கிழமை காலை 8.30மணிக்கு தேர்த்திருவிழாவும்,20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் ,மாலை 4 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும்.

தொடர்ந்து 21 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு சங்காபிஷேகமும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு தண்டிகைத் திருவிழாவும் நடைபெறும். (ஓ)

+++

(இருபாலை)

கல்வியங்காடு பத்திரகாளி சமேத வீரபத்திர சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 19ஆம் திகதி சனிக்கிழமை காலை இரதோற்சவமும் 20ஆம் திகதி காலை தீர்த்தோற்சவமும் இடம்பெற்று மாலை கொடியிறக்கமும் இடம் பெறும்.

அதனைத் தொடர்ந்து மறுநாள் பூங்காவன உற்சவமும் இடம்பெறும். (ஓ-136)

# தேர்தல் முடிவை ஏற்க அதிபர் மறுப்பு; உள்நாட்டு கலவரம் ஏற்படும் அபாயம்

(ஹராரே)

சிம்பாப்வே தேர்தல் முடிவை அதிபர் ஏற்க மறுப்பதால் சிம்பாப்வே நாட்டில் உள்நாட்டுக் கலவரம் ஏற்படும்அபாயம் ஏற்பட்டுள்ளது. சிம்பாப்வே நாட்டில் 28 ஆண்டுகளாக றொபேட் முகாபே அதிபராக இருந்து ஆட்சி நடத்தி வருகிறார். அங்கு கடந்த மாதம் 29ம்



திகதி பாராளுமன்றத் தேர்தல் நடந்தது. அதில் எதிர்க் கட்சியான ஜனநாயகமாற்றுக் கட்சி அதிக இடங் களைப் பிடித்து வெற்றி பெற்றது. றொபேட் முகாபே கட்சி தோல்வியடைந்தது. ஆனால் இந்த முடிவை றொபேட் முகாபே ஏற்க மறுத்து வருகிறார். மறுபடியும் ஓட்டு எண்ணிக்கை நடத்தவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறார்.

ஆனால் இதை எதிர்க்கட்சியினர் ஏற்கவில்லை. தேர்தல் முடிவு படி எதிர்க் கட் சியை ஆட்சி அமைக்க அழைக்கும் படிவற் புறுத்தி வருகின்றனர். இந்தப் பிரச்சினையில் அங்கு உள்நாட்டுக் கலவரம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே கலவரத்தைத் தடுக்க ஆபிரிக்க நாடுகள் யூனியனும் தென்னாபிரிக்க வனர்ச்சி அமைப்பும் தலையிட வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் வற்புறுத்தியுள்ளனர். இதுதொடர்பாக ஜனநாயக மாற்றுக் கட்சி பொதுச்செயலாளர் தென்டாய் பிரி எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது, றொபேட் முகாபே கட்சியை மக்களென புரட்சி மூலம் தோற்கடித்துள்ளார் இதை அவர் ஏற்க வேண்டும்.

## உலக தரிசனம்

இந்த நாட்டில் எல்லோரும் சகோ தரர், சகோதரிகளாக ஒற்றுமையாக இருந்து வாழ்கிறோம். அதிபரின் நடவடிக்கையில் கலவரம் ஏற்படும் நிலையுள்ளது. சிம்பாப்வே தெருக்களில் பிணக்குவியல் விழும் வரை நீங்கள் காத்திருக்காதீர்கள். உடனடியாக தலையிட்டு நல்ல முடிவு ஏற்படுத்துங்கள் இவ்வாறு அவர் கூறியுள்ளார். (அ-5)

# சீனாவிடமிருந்து பாகிஸ்தானுக்கு அதி நவீன போர்க்கப்பல்

சீனாவிடமிருந்து அதிநவீன எப் 22பி போர்க்கப்பல் ஒன்றினை பாகிஸ்தான் வாங்கியுள்ளது. பாகிஸ்தான் கடற்படைக்கு அதி நவீன எப் 22பிரக 4 போர்க் கப்பல்களை தயாரிப்பதற்கு சீனாவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டதாகவும் அதன் படி பி.என்.எஸ். சுல்பிகார் எனப் பெயரிடப்பட்டுள்ள முதலாவது போர்க்கப்பல் சீனாவின் ஷாங்காய் நகரிலிருந்து பாகிஸ்தானுக்கு வந்து கொண்டிருப்பதாகவும் பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் மற்றும் சீன கூட்டுத் தயாரிப்பில் 2 போர்க் கப்பல்களும் 4ஆவது கப்பலை முழுக்க முழுக்க பாகிஸ்தானில் உள்ள கராச்சி கப்பல்கட்டும் தளத்திலும் தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் 2013 இற்குள் கடைசி போர்க் கப்பல் கடற்படையில் சேர்க்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீர்மூழ்கி நாசகாரி ஏவுகணைகள் கொண்ட ஹெலிகொப்டர்களை தரையிறக்கும் வசதியும் நிலம் மற்றும் ஆகாயத்தில் இலக்கு களை குறிவைத்து தாக்கும் ஏவுகணைகளும் இந்தப் போர்க்கப்பல்களில் நிறுவப்பட்டுள்ளன.

இந்தப் போர்க்கப்பல் வியாபாரத்தின் மூலம் சீனாவுடனான பாகிஸ்தானின் இராணுவ உறவு மேலும்பலமடைந்துள்ளதாக ஜனாதிபதி முஷாரப் தெரிவித்துள்ளார். (அ-5)

# இக்கட்டான நிலையில் வறிய நாடுகள் ஒக்ஸ்பாம் கவலை தெரிவிப்பு

செல்வந்த நாடுகளின் பொருளாதார கவலைகளும் உயர்ந்துவரும் உணவுப் பொருட்களின் விலையும் வறிய நாடுகள் மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என சர்வதேச உதவி நிறுவனமான ஒக்ஸ்பாம் தெரிவித்துள்ளது.

தடுமாறும் பொருளாதார வளர்ச்சியானது வாக்குறுதியளிக்கப்பட்ட உதவிகள் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக வீழ்ச்சியடைவதற்கு காரணமாக அமைந்துள்ளது எனவும் ஒக்ஸ்பாம் தெரிவித்துள்ளது.

இதனிடையே புதுடில்லியில் இந்திய, ஆபிரிக்க உச்சிமாநாட்டில் உரையாற்றியுள்ள ஆபிரிக்க தலைவர்கள் உணவுப் பற்றாக்குறை யும் உயர்ந்து வரும் எண்ணெய் விலையும் ஆபிரிக்காவில் ஒரு நெருக்கடியை உருவாக்கி வருவதாக தெரிவித்துள்ளனர்.

இரண்டு நாள் உச்சிமாநாட்டின் முடிவில் உரையாற்றிய அவர்கள் ஜுலை மாதம் நடைபெறவுள்ள முன்னணி தொழில் மயமான நாடுகளின் உச்சிமாநாட்டின் போது தமது பிரச்சினைகளை விவாதிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனா

ஆபிரிக்காவை இனியும் கச்சாப் பொருட்களுக்கான ஒரு சந்தையாக மட்டுமே பார்க்கக் கூடாது எனவும் ஆபிரிக்க தலைவர்கள் கோரியுள்ளனர். (அ-5)

## ஆப்கானிஸ்தானில் 35 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தென்பகுதியில் உள்ள ஜபல் மாநிலத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை சாலைப்பணியாளர்கள் பணியில் ஈடுபட்டு இருந்தபோது, அவர்களை தலீபான் தீவிரவாதிகள் தாக்கினார்கள். இதில் 17 தொழிலாளர்கள் பலியானார்கள். 16 பேர் காயம் அடைந்தனர். இதைத் தொடர்ந்து இராணுவம் அந்த பகுதிக்கு விரைந்து சென்றது. அது எடுத்த நடவடிக்கையில் 17 தீவிரவாதிகள் பலியானார்கள். 12 பேர் காயம் அடைந்தனர்.

இதற்கிடையில் கஜினி மாநிலத்தில் குண்டு வெடித்ததில் ஒரு நேட்டோ இராணுவ வீரர் பலியானார். ஒருவர் காயம் அடைந்தார். (அ-5)

# பலத்த பாதுகாப்புடன் நேபாளத்தில் வாக்குப்பதிவு

(காத்மாண்டு)

நேபாளத்தில் 9ஆண்டுகளுக்கு பிறகு பாராளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நேற்று நடந்தது.

மொத்தம் 601 பிரதிநிதிகள் தேர்வு செய்யப்படவேண்டும் .இதில் 240 பேர் நேரடியாக மக்கள் ஓட்டு மூலம் தேர்வு செய்யப்படுவார்கள் கட்சிக்கு கிடைக்கும் ஓட்டுக்கள் அடிப்படையில் 336 பிரதிநிதிகள் தேர்வு செய்யப்படுவார்கள்.26பேர் நியமனம் செய்யப்படுவார்கள்.

தேர்தலில் நேபாள காங்கிரஸ் மாவோயிஸ்ட் கட்சி யு.எம்.எஸ்.கட்சி பல்வேறு சிறு கட்சிகள் போட்டியிடுகின்றன. 3ஆயிரத்து 700 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

மொத்தம்1 கோடியே 70 இலட்சம் வாக்காளர்கள் உள்ளனர். 21 ஆயிரம் வாக்குச் சாடிகள் அமைக்கப்பட்டிருந்தன. 1இலட்சத்து 58 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். காலையில் ஓட்டுப் பதிவு தொடங்கியதும் ஏராளமானோர் திரண்டு வந்து கியூவில் நின்று ஓட்டு போட்டனர்.

தேர்தலையொட்டி கடந்த 3 நாட்களாகவே நடந்த கலவரத்தில் வேட்பாளர் உட்பட 8 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இன்று வன்முறை நடக்காமல் தடுக்க பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திருந்தனர். தேர்தல் முறையாக நடக்கிறதா என்று கண்காணிக்க சர்வதேச பார்வையாளர்கள் 800 பேர் நேபாளத்துக்கு சென்றுள்ளனர். (அ-5)

# அல்கொய்தாவின் முக்கிய தளபதி இறந்துவிட்டதாகத் தகவல்

(லண்டன்)

பின்லேடனின் அல்கொய்தா இயக்கத்தின் முக்கிய தளபதியாக இருந்தவன் அபு உபைதா மஸ்ரி . அல்கொய்தா தலைமை அலுவலகத்தில் இருந்து இயக்கத்தை வழி நடத்தும் பணிகளில் ஈடுபட்டு வந்தான்.

ஐரோப்பிய நாடுகளில் அல்கொய்தா இயக்கத்தை வளர்க்கும் பணி இவனிடம் தான் ஒப்படைக்கப்பட்டு இருந்தது. முக்கிய தாக்குதலுக்கு இவன்தான் திட்டமிட்டு கொடுப்பான்.

எகிப்து நாட்டை சேர்ந்த இவன் நோயினால் இறந்துவிட்டதாக தகவல் கிடைத்துள்ளது. அமெரிக்க உளவுத் துறை இதை உறுதிப்படுத்தியுள்ளது. (அ-5)

# இஸ்லாம் மதத்தை அவமதித்ததாக கூறி ஒரு இந்து அடித்துக்கொலை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் நாட்டைச்சேர்ந்தவர் ஜகதீஸ் குமார். 22 வயதான அவர் மீர்புர்காஸ் நகரில் வசித்து வந்தார். அவர் ஒரு தோல் தொழிற்சாலையில் வேலைபார்த்து வந்தார். வேலை பார்க்கும் இடத்தில் நணபர்களுடன் மதம் பற்றி விவாதித்தபோது இஸ்லாம் மதத்தை அவமதிக்கும் சொற்களை கூறியதாக கூறப்படுகிறது. இதனால் ஆத்திரம் அடைந்த சகதொழிலாளர்கள் அவரை அடித்தே கொன்றனர்.

கிட்டத்தட்ட அரைமணி நேரத்திற்கு மேலாக அவர்கள் அடித்து உதைத்தனர். அவர் அடி தாங்கமாட்டாமல் இறந்து போனார் அவர். இறந்து போய் விட்டார் என்று தெரிந்த பிறகே அவர்கள் அடிப்பதை நிறுத்தினார்கள். இது பற்றி பொலிசுக்கு தகவல் கிடைத்ததும் பொலிஸார் அந்த தொழிற்சாலைக்கு விரைந்தனர் தொழிற்சாலைப் பகுதியில் பதட்டம் நிலவியது பொலீஸார் உடலை கைப்பற்றி வெளியே கொண்டு வருவதற்கு பெரிதும் சிரமப்பட்டனர்.

ஜகதீஸ் கொல்லப்பட்டதற்கான காரணத்தை அவரது குடும்பத்தினர் ஏற்க மறுத்து விட்டனர். கொலைக்கும் மதத்துக்கும் எந்தத் தொடர்பும் இருக்கமுடியாது என்று கூறிய அவர்கள் முஸ்லீம் சமூதாயத்தில் வாழும் பிற மதத்தினர் நபிகள் நாயகத்தையோ இஸ் லாமிய மதத்தையோ குறைசொல்ல முடியாது. எனவே அப்படியெல்லாம் ஜகதீஸ் பேசியி ருக்கமாட்டார். எனவே பொலீஸார் சகதொழி லாளர்களிடம் விசாரனை நடத்த வேண்டும் என்று அவர்கள் கோரினார்கள் . (அ-5)

# நாயின் மூக்கை கடித்த பெண்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் செல்ல நாயை தாக்க வந்த பெரிய நாயின் மூக்கை கடித்து குதறி விட்டார் ஒரு பெண்.

அமெரிக்காவில் மின்னபோலிஸ் பகுதியில் வசிப்பவர் ஹாமை ரைஸ். இவர் லேபரடார் வகை நாயை செல்லமாக வளர்த்து வருகிறார். அதற்கு எலா என்ற பெயரிட்டுள்ளார். சம்பவத்தன்று வீட்டின் முன்பகுதியில் உள்ள தோட்டத்தில் எலா விளையாடிக்கொண்டிருந்தது. காதில் ஹெட்போன் மாட்டியபடி ரைஸ் இசையை கேட்டுக்கொண்டிருந்தார்.

அப்போது பெரிய நாய் ஒன்று வீட்டின் வேலியை தாண்டி குதித்து உள்ளே நுழைந்தது. எலா நாயின் கழுத்துப் பகுதியை கொடூரமாக கவ்வியது. எலா போட்ட சத்தத்தில் ரைஸ் அதிர்ந்து விட்டார். அடுத்த வினாடி நிலைமையை உணர்ந்து பெரிய நாயிடம் இருந்து செல்ல நாயை மீட்க போராடினார்.

ஒரு கட்டத்தில் பெரிய நாயின் மூக்கு பகுதி ரைசின் முகத்துக்கு நேரே வந்தது. உடனே அதை கடித்து விட்டார். ரைஸ் வலி தாங்க முடியாமல் ஒரு ஓரத்தில் சுருண்டு படுத்து விட்டது. பெரிய நாய் தற்போது அந்த நாய் பிராணிகள் சங்க பாதுகாப்பில் உள்ளது. அதற்கு ராபீஸ் நோய் தொற்று உள்ளதா என சோதனை செய்கின்றனர். ராபீஸ் நோய் தொற்று இருந்தால் ரைஸ் சுக்கு சிகிச்சை அளிக்க வேண்டியிருக்கும் செல்ல நாய் கடுமையாக காயம் அடைந்து இருந் ததால் ரைஸ் மீது எந்த நடவடிக்கையும் எடுக் கப்படவில்லை. (அ-5)

# ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் பூமியை தாக்கியுள்ளது ராட்சத விண்கல்

## களிமண் சித்திரக் குறிப்பில் தகவல்

(லண்டன்)

பூமியில் 5ஆயிரம் ஆண்டுக்கு முன் ராட்சத விண்கல் மோதியதற்கு களிமண் சித்திர குறிப்பை ஆதாரமாக கண்டுபிடித்துள்ளனர் பிரிட்டன் விஞ்ஞானிகள்.

தற்போதைய ஈராக் பழங்காலத்தில் அசிரியா என அழைக்கப்பட்டது. அப்போது அதன் தலைநகராக நினெவெ இருந்தது. இந்நகரில் அழிந்து போன அரண் மனையின் எச்சங்களில் இருந்து 150 ஆண்டுக்கு முன் களிமண் சித்திரக் குறிப்பை கண்டெடுத்தார். அப்போதைய பிரபல தொல்லியல் நிபுணர் சர் அவுஸ்டன் ஹென்றிலேயார்டு அந்த கணிமண் சித்திரக் குறிப்பை பிரிட்டன் தொல்லியல் நிபுணர்கள் ஆராய்ந்து வந்தனர். தற்போது ஸ்பேஸ் புரோபல்ஷன் நிறுவன நிர்வாக இயக்குநர் ஆலன் பாண்டு பிரிஸ்டல் பல்கலைக்கழக வானியல் துறையைச் சேர்ந்த மூத்த நிபுணர் மார்க் ஹெம்ப்செல் களிமண் சித்திர குறிப்புக்கு விளக்கம் கண்டுபிடித்துள்ளனர். இந்த சித்திரக்குறிப்பு கி.மு.700ஆவது நூற்றாண்டில் எழுதப்பட்டது. கல்வெட்டு எழுத்துக்கள் போல களிமண்ணில் சித்திரங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கி.மு.700ஆவது நூற்றாண்டு சித்திரக் குறிப்புடன் கம்ப்யூட்டரை பயன்படுத்தி இந்த களிமண் சித்திரக் குறிப்பை ஆராய்ந்தனர். இதை அப்போதைய வானியல் நிபுணர்கள் எழுதியிருப்பது உறுதி செய்யப்பட்டது. அதில் 5ஆயிரம் ஆண்டுக்கு முன் கி.மு.3123ஆம் ஆண்டு ஜுன் மாதம் பூமியை கடுமையாக தாக்கிய ராட்சத விண்கல் குறித்து



தெரிவிக்கப்பட்டுள்ளது, ஆஸ்திரிய மலையில் கோபெல்ஸ் நகருக்கு அருகே இந்த விண்கல் தாக்கியுள்ளது. பயங்கர வேகத்தில் வந்து பூமியை மோதிய இந்த விண்கல்லின் மூன்றில் இரண்டு பகுதி மோதிய வேகத்தில் மீண்டும் பூமியை விட்டு வெளியே பாய்ந்துள்ளது. பூமியை நெருங்கும் போது சூப்பர்சானிக் அதிர்ச்சி கதிர்களை வெளியிட்டுள்ளது. இந்த விண்கல் பூமியை தாக்கிய போது 400 டிகிரி செல்ஷியஸ் வெப்பத்தை ஏற்படுத்தியது. 10 இலட்சம் சதுர கி.மீ. பரப்பு இந்த தாக்குதலின் போது அழிந்தது. சக்தி வாய்ந்த ஆயிரம் டன் டி.என்.டி வெடிமருந்தை ஒரே நேரத்தில் வெடிக்கச் செய்தால் என்ன விளைவு ஏற்படுமோ அத்தகைய விளைவு ஏற்பட்டுள்ளது. நீண்ட காலமாக கோபல்ஸ் நகரின் அருகில் உள்ள நிலப் பகுதியின் வடிவம் குறித்து பூகோளவியல் நிபுணர்கள் குழம்பி வந்தனர். இந்த குழப்பத்தை தீர்ப்பதாக புதிய கண்டுபிடிப்பு அமைந்துள்ளது. ராட்சத விண்கல தாக்குதல் காரணமாகத் தான் இப்பகுதியில் பூமியின் வடிவம் வித்தியாசப்பட்டுள்ளது என்ற முடிவுக்குதொல்லியல் நிபுணர்கள் வந்துள்ளனர். (அ-5)

## கிளிநொச்சியைக் கைப்பற்ற "மடு"வுக்கு போவது ஏன் படையினரிடையே குழப்பம் என்கிறது ஐ.தே.க

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது படையினர் நல்லூர் கோவில் பக்கத்துக்கே செல்ல வில்லை இன்று கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்கு எதற்காக மடுவிற்குச் செல்லவேண்டும் என்று படையில் உள்ள கத்தோலிக்கர்கள் கேள்வி எழுப்புவதற்காக ஐக்கியதேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் லக்ஸ்மன் செனி விரட்ன கடந்த புதன்கிழமை பேசிய தாவது,

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது படையினர் நல்லூர் கோயில் பக்கத்துக்கே செல்லவில்லை. இன்று கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்கு எதற்காக மடுவிற்குச்செல்ல வேண்டும் என்று படையில் உள்ள கத்தோலிக்கர்கள் கேட்கின்றனர்.

எனினும் அரசு அரசியல் லாபத்திற்காக மடுவைக் கைப்பற்ற முனைகின்றது. பொத்துவிலில் அதிரடிப் படையினருக்கும் படையினருக்கும் இடையே துப்பாக்கி மோதல் நடைபெற்றுள்ளது.

அமைச்சர் ஜெயராஜ் கம்பகாவில் படுகொலை செய்யப்பட அரசாங்கம் மதவாச்சி வீதியை மூடும் முட்டாள் தனமான செயலைச் செய்கிறது. மக்களுக்கு இன்றுள்ள நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கைகள் மேலும் பிரச்சினைகளையே கொடுக்கின்றது என்றார் அவர். (அ-5)

## அமைச்சர் ஜெயராஜுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படாமை குறித்து விசாரிக்க குழு

### பொலிஸாரைத் திசை திருப்பவே அடையாள அட்டை போடப்பட்டதாகச் சந்தேகம்

(கொழும்பு)

வெலிவேரிய விளையாட்டுப் போட்டி நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படாமை குறித்து விசாரணை நடத்துவதற்கு விஷேட குழுவொன்றினை பாதுகாப்பு அமைச்சு நியமித்துள்ளது. இந்த விசாரணைக் குழுவில் பொலிஸ் உயரதிகாரிகள் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்ட அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேக்கு வழங்கப்பட வேண்டியபாதுகாப்பு உரிய முறையில்வழங்கப்பட்டிருக்கவில்லைஎன்று குண்டுதாக்குதல் குறித்து விசாரணை நடத்தி வரும் இரகசிய பொலிஸார் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்தே இந்த விசாரணைக் குழுவினை பாதுகாப்பு அமைச்சு நியமித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, குண்டுத் தாக்குதல் தொடர்பாக இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டவர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் 20 பேர் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

குண்டுத்தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட வாழைச்சேனையினை முகவரியாகக் கொண்ட அடையாள அட்டை போலியாக தயாரிக்கப்பட்டது என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

பொலிஸாரை திசை திருப்பும் வகையில் இந்த அடையாள அட்டை இவ்விடத்தில் போடப்பட்டிருக் கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. போலி அடையாள அட்டையினை தயாரித்தவர்கள் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற தினத்தன்று அவ்விடத்திற்கு வருகைதந்திருந்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேக்கு வழங்கப்படவேண்டிய பாதுகாப்புக்கள் உரிய முறையில் வழங்கப்பட்டிருக்க வில்லை என்ற இரகசிய பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

அமைச்சருக்கு உயிர் அச்சுறுத்தல் இருந்த போதிலும் அச் சந்தர்ப்பத்தின் போது அவருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்புக்கள் அடிப்படை பாதுகாப்பாகவே காணப்பட்டதாகவே தெரியவந்துள்ளது.

நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்திருந்தவர்கள் அன்றைய தினம் எவ்வித சோதனைகளுக்கோ அல்லது விசாரணைகளுக்கோ உட்படுத்தப்படவில்லை என்பதோடு அப்பகுதி மக்களைக் கட்டுப்படுத்தி அமைச்சருக்குரிய பாதுகாப்பை வழங்க பாதுகாப்புபிரிவினர்நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பதும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

அத்துடன் அப்பகுதியின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்காமையினால் தற்கொலை குண்டுதாரி தமது இலக்கை சரியாக மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக இரகசிய பொலிஸார் தெரிவித்தனர். அரசியல் முக்கியஸ்தர்களுக் குரிய பர்துகாப்பு வழங்கப்படுமாயின் அமைச்சர் அப்பகுதிக்கு செல்வதற்கு முன்னர் பாதுகாப்பு தரப்பினர் அவ்விடத்திற்கு சென்று அப்பகுதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்து வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கவேண்டும் ஆயினும் அவ்வாறான தொரு நடவடிக்கையில் பாதுகாப்பு தரப்பினர் ஈடுபட்டிருக்க வில்லை என்பதும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

அமைச்சருக்குரிய பாது காப்பை வழங்கும் விடயத்தில் பல குறை பாடுகள் காணப்படுகின்றமையால் அப் பாதுகாப்பு விவகாரம் குறித்து விசாரண்ை நடத்தவே பாதுகாப்பு அமைச்சினால் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-5)

## அமைச்சர் ஜெயராஜுக்கு அதியுயர்ந்த பாதுகாப்பை அரசு வழங்கியிருந்தது

### அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தகவல்

படுகொலைசெய்யப்பட்ட சிரேஷ்ட அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளேக்கு புலிகளால் உயிராபத்து அச்சுறுத்தல் இருந்தபடியால் அவருக்கு அரசாங்கம் அதி உயர்ந்த பாதுகாப்பை வழங்கியது. பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் அவரது பாதுகாப்புநடவடிக்கைகளை பொறுப்பேற்றிருந்தனர். நீர்கொழும்பில் இருந்து கொழும்புவரை 1500 விசேட அதிரடிப் படைவீரர்கள் அவருக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத் தப்பட்டனர் என அமைச்சரவைப் பேச்சாளரும்தகவல் ஊடகத்துறை அமைச்சருமான அனுர பிரியதர்ஷன யாப்பா கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர்சந்திப்பு நேற்றுக்காலை அரசாங்க தகவல் திணைக் களத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது,

விளையாட்டுவைபவங்களில் இவ்வாறான மனிதாபிமானமற்ற தாக்குதல் நடத்துவது சர்வதேச சட்டத்திற்கு முரணானதாகும். சிறிய சந்தர்ப்பங்களைக் கூட பயங்கரவாதிகள் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

எனவே நாட்டு மக்கள் அமைதியுடன் நிம்மதியாக வாழவேண்டுமாயின் எமது நாட்டில் இருந்து பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும். அதற்காக நாட்டு மக்கள் அனைவரும் பேதங்களை மறந்து ஒன்றிணைய வேண்டும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-5)


**திருமறைக் கலாமன்றம்**

நடத்தும்

**உலக நாடக தின விழா**

*கருத்தரங்கும், கலைஞர் கௌரவிப்பும்*

காலம்:- 12.04.2008 சனிக்கிழமை (நாளை)

நேரம்:- மு.ப.9.30 மணி -கருத்தரங்கு

பி.ப.4.30 மணி-கலைஞர் கௌரவிப்பு

இடம்:- கலைத்தூது கலையகம்

286 ,பிரதான வீதி ,யாழ்ப்பாணம்.

*கருத்தரங்கு*

பொருள்:

'ஜப்பானிய மரபுவழி அளிக்கைகள் -ஓர் அறிமுகம்'

கருத்துரையாளர்கள்:-

- நீ மரியசேவியர் அடிகள்
- திருமதி எ.வைதேகி
- திருமதி ஜி.ஜேன் வகுஷா

*கலைஞர் கௌரவிப்பு*

தலைமை:

திரு. ஆறுமுகம் சிவசுவாமி

(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்)

திருமறைக்கலாமன்றத்தின் ஆரம்பகால உருவாக்கத்திலிருந்து இன்றுவரை அர்ப்பணத்துடன் செயற்பட்டு வரும் மூத்த உறுப்பினர்களில்

- சிற்பச்செல்வன் , கலாபூஷணம், ஏ.வி.ஆனந்தன்
- இசைத் தென்றல் ம.யேசுதாசன்
- அரங்கவாரிதி ,கலாபூஷணம் ஜி.பி. பேர்மினஸ்,
- கலைவேந்தன் ம.தைரியநாதன்

ஆகிய நான்கு கலைஞர்களும் திருமறைக் கலாமன்றத்தில் அவர்கள் ஆற்றிய கலைச்சேவையைப் பாராட்டிமன்றத்தின் அதி உயர் விருது வழங்கி கௌரவிக்கப்படுவார்கள்.

தொடர்ந்து கலை நிகழ்வுகளாக கோவலன் -கண்ணகி, சத்தியவான் சாவித்திரி, ஸ்ரீவள்ளி, சாகாத மனிதம் நாடகங்களிலிருந்து சில பாத்திரங்களின் நிகழ்த்திக் காட்டுகையும் இசைநிகழ்ச்சியும் இடம்பெறும்.

காலையிலும் ,மாலையிலும் இடம்பெறும் இவ்விரு நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*திருமறைக்கலாமன்றம்*

238,பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:222 2393

திருமறைக்கலாமன்றத்தின் அதி உயர் விருது வழங்கி கௌரவிக்கப்படும் எமது மூத்த கலைஞர்களை வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

இலங்கையிலுள்ள திரு மறைக் கலாமன் றங்கள் சார்பாக திருமதி ஐ.பி.எஸ்.செனிவிரட்ன மேலதிக பிரதி இயக்குநர் திருமறைக்கலாமன்றம் அவிசாவளை (கொத்தணி)

சர்வதேச திருமறைக் கலாமன்றங்கள் சார்பாக திரு யூலியஸ் அன்ரனிப் பிள்ளை திரு மறைக்கலாமன்றம்- நோர்வே

கலைக்கான பணியில் களம் பல கண்ட கலைஞர்களுக்கு எமது வாழ்த்துக்கள் 'முற்றம்' சஞ்சிகைக் குழு திருமறைக் கலாமன்றம் பிரான்ஸ்

(சி/981)



**வடமராட்சி ,தென்மராட்சி பிரதேசத்திற்கான யூனியன் அஷ்யூரன்ஸின் மாபெரும் வேலை வாய்ப்பு!**

உங்கள் பிரதேசங்களிலேயே எங்கள் நேர்முகத் தேர்வுகள்

**ஆயுள் காப்புறுதி (LIFE INSURANCE )**

1. காப்புறுதி ஆலோசகர் (INSURANCE ADVISOR)
2. காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர் (INSURANCE DEVELOPMENT OFFICER)
3. ASSISTANT AGENCY DEVELOPMENT MANAGER
4. AGENCY DEVELOPMENT MANAGER

**பொதுக் காப்புறுதி (GENERAL INSURANCE)**

1. காப்புறுதி ஆலோசகர் (INSURANCE ADVISOR)
2. இளநிலை விற்பனை அதிகாரி (JUNIOR SALES EXECUTIVE)
3. விற்பனை அதிகாரி (SALES EXECUTIVE)

**கல்வித் தகைமைகள்**

1. G.C.E (O/L) கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தி (ஆகக்குறைந்தது)
2. காப்புறுதி துறையில் முன் அனுபவம் விரும்பத்தக்கது.(ஆனால் முக்கியமல்ல)
3. உயர் பதவிகளுக்கு மேலதிக தகைமைகள் எதிர்பார்க்கப்படும்(ஆயுள் காப்புறுதி - பதவி இலக்கம் 3,4/பொதுக்காப்புறுதி-பதவி இலக்கம் 3)

**வேலைவாய்ப்பின் மூலம் பெறக்கூடிய நன்மைகள்**

1. அதியுயர் சம்பளம் பெறக்கூடிய அரிய வாய்ப்பு
2. ஆறுமாத காலத்தில் அதீத திறமையுடன் வேலை செய்பவர்கள் நிரந்தர வருமானத்திட்டத்திற்குள் உள்வாங்கப்படுவார்கள்
3. வெளிநாட்டு சுற்றுலாவிற்கான அரியவாய்ப்பினைப்பெற்றுக்கொள்ளல்
4. இலகு தவணை முறையில் வாகனக்கடன் வசதிகள்
5. வருடாவருடம் விருதுகளைப் பெறும் வாய்ப்பு
6. உங்கள் திறமைகளுக்கு ஏற்ற வகையில் விரைவான பதவி உயர்வுகள்

**வடமராட்சியில் நேர்முகத்தேர்வு நடைபெறும்**
இடம்:- நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்
காலம்:-14.04.2008 திங்கட்கிழமை
நேரம்:-மு.ப.9.30 மணி

**தென்மராட்சியில் நேர்முகத்தேர்வு நடைபெறும்**
இடம்:- சாவகச்சேரி இந்துக்கல்லூரி
காலம்:-15.04.2008 செவ்வாய்க்கிழமை
நேரம்:-மு.ப.9.30 மணி

*அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்*

(சி/987)

# அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே இலக்கு வைக்கப்பட்டது ஏன்?

நாடாளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்களை ஆளுமையின் காரணமாக மிகச் சுலபமாக பதிலளித்து அரசாங்கத்தையும், அமைச்சர்களையும் பாதுகாக்கும் பணிகளை அமரர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மிகச் செம்மையாக முன்னெடுத்தார்.

நாடாளுமன்றத்தில் எழுப்பப்படும் பல விதமான கேள்விகளையும் பேச்சுத்திறனில் காணப்பட்ட ஆளுமையினால் கட்டுப்படுத்தினார். ஜெயராஜ் கெனீசியஸ் பெர்னாண்டோ புள்ளேயின் அரசியல் பயணம் மிக மெதுவானதாகவே காணப்பட்டது.

கட்டானைத்தேர்தல் தொகுதியின் ஊடாக தனது அரசியல் பிரவேசத்தை ஆரம்பித்த ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. குறிப்பாக கட்டானைத் தேர்தல் தொகுதி ஐக்கிய தேசியக் கட்சியின் பூரண கட்டுப்பாட்டில் காணப்பட்டதுடன், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஜாம்பவான்களின் களமாகவும் காணப்பட்டது. எனவே அரசியல் பின்னணியற்ற ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கட்டானைத் தேர்தல் தொகுதியில் வெற்றிபெறுவது என்பது சிம்மசொப்பனமாகவே கருதப்பட்டது.

எனினும், இவ்வாறான கடுமையான சவால்களை எதிர்கொண்டு படிப்படியாக அரசியலில் தனக்கு என ஒரு இடத்தை பிடித்துக் கொண்டார் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே.

கம்பஹாவில் தனது ஆளுமையைக் காண்பிப்பது மிகவும் சவாலுக்கு உரியதாகக் காணப்பட்டது. எனினும், ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் நியமிக்கப்பட்டதன் மூலம் தனது மன உறுதியை அவர் வெளிப்படுத்தினார்.

மும்மொழியிலும் காணப்பட்ட புலமை, நகைச்சுவை உணர்வுடன் கூடிய பேச்சாற்றலின் ஊடாக அரசாங்கத்தின் கருத்துக்களை ஆளமாக சொல்லக்கூடிய திறமை ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயிடம் நிறையவே இருந்தது.

சட்டவிதிகளை நன்கு அறிந்து வைத்திருந்தார். தனது அறிவாற்றலால் எதிர்க்கட்சியினரின் வாதங்களை தவிடு பொடியாக்கிவிடும் விதத்தையே பெற்றிருந்தார்.

தேவையேற்படும்போது சட்டவிதிகளை தனக்குத் தேவையான வகையில் அர்த்தப்படுத்தி மிகச்சுலபமாக அரசாங்கத்தை காப்பாற்றி வந்தார்.

அரசாங்கத்தின் கொள்கைகள், தீர்மானங்கள் மற்றும் திட்டங்களுக்காக வாதிடுவதில் அரசாங்கத்தின் ஈடிணையற்ற சொத்தாக ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே போற்றப்படுகின்றார்.

மணித்தியாலக் கணக்கில் எதிர்க்கட்சியின் கேள்விக் கணைகளுக்கு சற்றும் சளைக்காது பதிலளிப்பது என்பது சிக்கலான காரியமாகும். எனினும், ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேக்கு இது ஒரு பொழுது போக்காகவே காணப்பட்டது.

சிலருக்கு ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் பேச்சாற்றலும் ஆளுமையும் தலைவலியை ஏற்படுத்தியது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் வலுவான வாதத்திறன் அரசாங்கத்தின் மிக முக்கியமானதொரு சொத்தாக மதிக்கப்பட்டது. தனது அமைச்சரவை சகாக்களின் பல்வேறு மோசடிகள், அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு மிகச் சுலபமாக பதிலளித்து அந்தக் குற்றச்சாட்டுக்களை வலுவிழக்கச் செய்வதில் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே விற்பன்னராக திகழ்ந்தார்.

ஆக்ரோஷமான வாதங்களில் ஈடுபடும் சில அமைச்சர்களுக்கு அதி உச்ச பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பதே ஜெயராஜ் பெர் னாண்டோ புள்ளேயின் ஏகோபித்த கருத்தாக அமைந்திருந்தது.

### கிழக்குத் தேர்தலின் முதல் முடிவு

எனினும், கடந்த 6ஆம் திகதி வெலிவேரியா மரதன் போட்டிப் போட்டி நிகழ்வுகளில் கலந்துகொண்ட ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேக்கு மிகவும் பலவீனமான பாதுகாப்பு ஏற்பாடுகளே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேக்கு மிக உச்ச அளவிலான உயிர் அச்சுறுத்தல் காணப் பட்டது.

## கொழும்பு ஆங்கில நாளிதழ் 'த மோர்னிங் லீடர்' ஆய்வு

தேச நிர்மாண கட்டமைப்புத் துறை அமைச்சர் டி.எஸ்.தஸநாயக்கா மீதான தாக்குதலின் இலக்கு ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் கொலை கிழக்குத் தேர்தலின் முதலாவது முடிவாக கருதப்படுகின்றது. தமிழீழ விடுதலைப்புலிகளின் மிக முக்கிய இலக்காக ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே காணப்பட்டார். பல்லின மக்கள் வாழும் திகாமடுல்ல மாவட்டத்தில் எதிர்வரும் வாரம் வாக்கு வேட்டையில் ஈடுபட அமைச்சர் ஜெய ராஜ் பெர்னாண்டோ புள்ளே உத்தேசித்திருந்தார்.



2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றதனைத் தொடர்ந்து இரண்டு முக்கிய பொறுப்புக்கள் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயிடம் ஒப்படைக்கப்பட்டது. 2005 ஆம்ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றதனைத் தொடர்ந்து இரண்டு முக்கிய பொறுப்புக்கள் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயிடம் ஒப்படைக்கப்பட்டது.

முதலாவது, பெருந்தெருக்கள் மற்றும் வீதி அமைச்சராக அவர் நியமிக்கப்பட்டார். அரசா ங்கத்தின் பிரதான திட்டங்களின் ஒன்றான "நகும" இவரது அமைச்சின் கீழ் முன்னெ டுக்கப்பட்டது.

இரண்டாவது பொறுப்பாக அரசாங்கத்தின் பிரதம கொறடா பதவி வழங்கப்பட்டது. இந்தப் பதவியில் அவர் விற்பன்னராக திகழ்ந்தார்.

2006ஆம் ஆண்டு ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளின் அரசாங்க பிரதிநிதியாகச் செயற்பட்டார். இலங்கை - இந்தியா நாடாளுமன்றக் கூட்டமைப்பின் தலைவராக ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பதவி வகித்தார். மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளராகவும் செயற்பட்டார். ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் மறைவு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் மிகப் பாரிய இழப்பாக அமைந்துள்ளது.

ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே அனைத்து வலிகளையும் தாங்கிக் கொண்டு அரசாங்கத்தின் நிலைப்பாடுகளை சரி என வாதிட்டுப் போராடினார் எனக் கூறி அது பிழையாகாது.

### மரதன் ஓட்டப் போட்டி மைதானத்தில் நடந்தது என்ன?

மரதன் ஓட்டப் போட்டி நடைபெறும் வெலிவேரிய காந்தி மைதானத்திற்கு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே காலை 6.30 மணியளவில் வருகை தந்தார். அப்போது மெய்வல்லுநர்கள் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அமைச்சர் தனியாகவே காணப்பட்டார்.

போட்டி ஆரம்பிக்க தாமதித்ததன் காரணமாக அவர் கட்டுபெத்தவிற்குச் சென்றுவிட்டு ஒரு மணித்தியாலம் கழித்து மீண்டும் மைதானத்திற்கு வருகை தந்தார். தேசிய மெய்வல்லுநர் பயிற்றுநர் லக்ஸ்மன் டி அல்விஸ் மற்றும் தேசிய மரதன் சாம்பியன் கே.ஏ. கருணாரட்ண ஆகியோர் அமைச்சருக்கு அருகாமையில் காணப்பட்டனர்.

ஓட்டப் பந்தய வீரர்களை உற்சாகப்படுத்தும் வகையில் அமைச்சர் சிறிய உரையை நிகழ்த்தினார். விழா மேடையிலிருந்து லக்ஸ்மன் டி அல்விஸினால் அமைச்சர் மரதன் ஓட்டப் போட்டி நடைபெறும் இடத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

போட்டி தொடங்குவதற்கான சமிக்ஞை கொடி அசைத்துக் காட்டுவதற்காக அமைச்சர் மரதன் ஓட்டப் போட்டி ஆரம்பமாகும் இடத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

பாதையைக் கடந்து கொடியை அசைத்த போது அமைச்சருக்கு அருகாமையில் ஏதோவொரு சம்பவம் இடம்பெற்றது. சில நொடிகளில் அமைச்சரின் உடல் சிதறிய நிலையில் இருபத்து ஐந்து அடிக்கு அப்பால் காணப்பட்டது.

லக்ஸ்மன் டி அல்விஸ் கே.ஏ.கருணாரத்ன மற்றும் அமைச்சரின் இரண்டு பாதுகாப்பு அலுவலர்கள் குண்டுவெடிப்புச் சம்பவ இடத்தில் கொல்லப்பட்டனர். தமிழ் -சிங்களப் புத்தாண்டை கொண்டாடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியது.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதான இலக்காக காணப்பட்டார். உண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் பத்து இலக்குகளில் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே முக்கியமானவராகக் காணப்பட்டதாக இராணுவப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேச நிர்மாண கட்மைப்புத் துறை அமைச்சர் டி.எம்.தஸநாயக்க கிளைமோர்த் தாக்குதலுக்கு இலக்காகி பலியானதைத்தொடர்ந்து அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே சிலவாரங்களுக்கு வெளிநாடு சென்றிருந்தார்.

பொலிஸ் மா அதிபரினால் பலமுறை பெர்னாண்டோ புள்ளேக்கு இருக்கும் அச்சுறுத்தல்கள் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக உயர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய இருவர் அண்மையில் கட்டானை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்து கொண்டனர். கிழக்கு தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது அமைச்சருக்கு பாரிய அச்சுறுத்தல் இருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் எச்சரிக்கை விடுத்திருந்தன.

எனினும், அரசாங்கத்தின் திகாமடுல்ல மாவட்ட தேர்தல் பிரசார நடவடிக்கைகள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

எந்த வித பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படாத இந்த நிகழ்வுக்கு ஏன் அமைச்சர் கலந்துகொண்டார்? அமைச்சரவை அமைச்சராகவும், அடுத்த பிரதம பதவிக்கான சில பெயர்களில் ஒருவருமான அமைச்சர் ஏன் இவ்வாறு பாதுகாப்பற்ற நிலையில் நடந்து கொண்டார். இந்தக் குண்டுவெடிப்புத் தொடர்பாக வெலிவேரியா காவல்துறையினரின் பொறுப்பு மிகவும் அதிர்ச்சியளிக்கின்றது.

இந்தமக்கள் நிழ்வில் கலந்துகொள்ளும் பொருட்டு மைதானத்திற்கு வந்த எவரும் சோதனைக்கு உட்படுத்தப்படவில்லை. ஓட்டப் பந்தய வீரர்கள் அனைவரும் நேர்மையான பங்கேற்பாளர்கள் என்றால் பதிவு செய்யப் பட்டிருக்க வேண்டும்.

மரதன் ஓட்ட பந்தய வீரர் ஒருவரே தற்கொலைக் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டாரானால் அவர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தால் இந்தச் சம்பவத்தைத் தடுத்திருக்க முடியும். ஆரம்ப கட்ட உடற் சோதனை நடத்தப்பட்டிருந்தால் எவ்வாறு அமைச்சருக்கு அருகாமையில் குண்டுதாரி வந்திருக்க முடியும் என்பதே மிகப்பெரிய கேள்விக்குறியாக உள்ளது. அமைச்சருக்கு அருகாமையில் பொது மக்களும், மரதன் ஓட்டப் பந்தய வீரர்களும் நின்றுகொண்டிருந்தனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் மஹிந்த ராஜபக்ஷவின் பாரியாரின் தாயார் காலமான போது மூன்று சோதனைச் சாவடிகளின் மூலம் இறுதிவணக்கம் செலுத்த வருவோர் சோதனையிடப்பட்டனர்.

எனினும், மிகப் பாரிய அச்சுறுத்தல்கள் நிலவும் அமைச்சர் ஒருவர் பங்கேற்கும் நிகழ்வுக்கு குறைந்த பட்சம் குண்டுகளை கண்டு பிடிக்கக்கூடிய ஒரு கருவியேனும் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் இந்தப் படுகொலை சம்பவம் தொடர்பாக பொலிஸ்மா அதிபர் விளக்கமளிக்க வேண்டும்.

HATTON NATIONAL BANK LIMITED HNB

HNB உடனான புத்தாண்டுக் கொடுக்கல் வாங்கல் உங்கள் வாழ்க்கையை ஒளிமயமாக்கும்

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை ஹற்றன் நஷனல் வங்கியின் சகல கிளைகளிலும் காலை 8 மணி முதல் 11 மணி வரை வங்கிக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு கைவிஷேடம் வழங்குவதுடன் புதிய சேமிப்புக் கணக்கு ஆரம்பிப்பவர்களுக்கும் ஏற்கனவே உள்ள சேமிப்புக் கணக்குகளில் பணத்தை வைப்பில் இடுபவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.

சிறுவர் சேமிப்புக் கணக்கில் ரூபா. 500 -முதல் 9999 வரை வைப்பில் இடுபவர்களுக்கு சிங்கிதி தொப்பி அல்லது புத்தகப்பையும் ரூபா 10,000ற்கு மேல் வைப்பில் இடுபவர்களுக்கு மணிக்கூடும் பரிசாக வழங்கப்படும்.

சேமிப்புக் கணக்கில் ரூபா 10,000 முதல் ரூபா 24,999 வரை வைப்பில் இடுபவர்களுக்கு ஒரு சுடு தண்ணீர் போத்தல் (Flask) அல்லது சிறிய டோச்லைற்றும் ரூபா 25,000 ற்கு மேல் வைப்பில் இடுபவர்களுக்கு பெரிய டோச்லைற்று அல்லது ஒரு மின் அழுத்தி (Iron Box) பரிசாக வழங் கப்படும்.

இப் பரிசுப் பொருட்களை வழங்குவதில் பின்வரும் நிபந்தனைகள் உள்ளடங்கும்.

- ஒரு வாடிக்கையாளர் ஒரு பரிசுப் பொருள் மட்டும் பெறத் தகுதியுடையவராவர்.
- இருப்பு இருக்கும் வரைக்கும் முதல் வரும் வாடிக்கையாளர் அடிப்படையில் பரிசில் பொருட்கள் வழங்கப்படும்.
- பரிசுப் பொருளை பெறும் தகமையில் வைப்பில் இடப்பட்ட வைப்புத் தொகை 6 மாதத்திற்கு பேணப்படவேண்டும்.

ரீ.ஜெயராஜசிங்கம், சிரேஷ்ட முகாமையாளர் — ஹற்றன் நஷனல் வாங்கி, யாழ்ப்பாணம்.

# இந்திய அணிக்கு சாதகமாக கான்பூர் ஆடுகளம் அமைக்கப்பட்டுள்ளது

## தென்னாபிரிக்க அணித்தலைவர் சிமித் புகார்

(கான்பூர்)

கான்பூர் ஆடுகளம் சுழற் பந்து வீச்சுக்கு அதிகம் ஒத்துழைக்கும் வகையில் தயார் செய்யப்பட்டிருப்பது கவலை அளிப்பதாக தென்னாபிரிக்க அணித்தலைவர் சிமித் பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.

இந்தியா வந்துள்ள தென்னாபிரிக்க அணி மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. சென்னையில் நடந்த முதல் டெஸ்ட் சமனிலையானது அகமதாபாத்தில் நடந்த இரண்டாவது டெஸ்டில் இந்தியா இன்னிங்ஸ் மற்றும் 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்து, தொடரில் 0-1 என பின் தங்கியுள்ளது.

இந்நிலையில் மூன்றாவது மற்றும் இறுதி டெஸ்ட் இன்று கான்பூரில் ஆரம்பமாகிறது. டெஸ்ட் தரவரிசையில் தற்போது இரண்டாவது இடத்தில் இருக்கும் இந்திய அணிதனது இடத்தை தக்கவைத்து கொள்ள இப் போட்டியில் வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. இதையடுத்து ஆடுகளம் சுழற் பந்து வீச்சுக்கு அதிகம் கைகொடுக்கும் வகையில் தயார் செய்ய வேண்டும் என இந்திய கிரிக்கெற்சபை (பி.சி.ஐ.) கேட்டுக்கொண்டதாக செய்திகள் வெளியாயின. இதை பி.சி. சி.ஐ. மறுத்துவிட்டது. ஆடுகள பராமரிப்பாளர் சிவ் குமாரும் இக் குற்றச் சாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை.

இது குறித்து அவர் கூறுகையில், 'எங்களுக்கு யாரும் எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை. வழக்கம் போல் ஆடுகளத்தை பராமரித்து வருகிறோம். இங்கு முதலில் துடுப்பாட்டம் செய்வது நல்லது போகப் போக ஆடுகளம் பந்துவீச்சுக்கு ஏற்ற வகையில் மாறிவிடும்' என்றார்.

தற்போது ஆடுகளம் அதிகம் வெடிப்புடன் காணப்படுகிறது. இது சுழற்பந்து வீச்சுக்கு சாதகமானது. வழக்கமாக டெஸ்ட் போட்டி களின் மூன்று அல்லது நான்காவது நாளுக்கு பின்னர் தான் ஆடுகளத்தில் வெடிப்பு ஏற்படும். இம்முறை ஆரம்பத்திலேயே வெடிப்பு காணப்படுவது சுழற்பந்து வீச்சை சமாளிக்க திணறும் தென்னாபிரிக்க வீரர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. முக்கியமான போட்டிக்கான ஆடுகளம் ஒரு அணிக்கு மட்டும் சாதகமாக அமைக்கப்பட்டிருப்பது கவலை தருகிறது என்கிறார் தென்னாபிரிக்க அணித்தலைவர் சிமித்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில், கான்பூர் ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு ஏற்ற வகையில் தயார் செய்யப்பட்டுள்ளது. இது சிறிது கவலை அளிக்கிறது. இருந்தாலும் எந்த சூழ்நிலையையும் சமாளிக்க நன்றாக பயிற்சி செய்துள்ளோம். இதனால் இரு அணி களுக்கும் எதுவும் கடினமாக இருக்காது. போட்டி விறுவிறுப்பாக இருக்கும் என நம்பலாம். ஆட்டத்தில் முழு கவனம் செலுத்த இருக்கிறோம்.

இந்திய அணி மூன்று சுழற்பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கும் என செய்திகள் வெளிவந்துள்ளன. முன்னணி பந்துவீச்சாளர்கள் இருவரையும் முதல் இரண்டு டெஸ்டில் சிறப்பாக எதிர்கொண்டோம். அதனால் இம்முறையும் எளிதாக சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. மூன்றாவது போட்டிக்கு அணியை தேர்வு செய்வதில் இந்தியாவுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. அனுபவம் மற்றும் இளமைக்கு இடையே விரிசல் ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது. இப்படி பல பிரச்சினைகளில் இந்திய அணி சிக்கி தவிக்கிறது. இவ்வாறு சிமித் தெரிவித்தார். (5)

## வீனஸ் டென்னிசுக்கு தற்காலிக முழுக்கு

(அமெலியத்தீவு)



அமெரிக்காவின் முன்னணி டென்னிஸ் வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் தற்காலிகமாக டென்னிசிலிருந்து விலகி இருக்க முடிவு செய்திருக்கிறார்.

6 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரான வீனஸ், புளோரிடாவில் உள்ள அமெலியா தீவில் நடந்துவரும் பாஸ்ச் அன்ட் லாம்ப் டென்னிஸ் போட்டியில் இருந்து கடைசி நேரத்தில் விலகினார். மேலும் ரஷியா வுக்கு எதிராக எதிர்வரும் 26ஆம் திகதி மற்றும் 27ஆம் திகதியில் நடக்கும் பெட் கோப்பை அரைஇறுதியில் அமெரிக்க அணிக்காக ஆட மறுத்துள்ளார்.

'எனக்கு சில பிரச்சினைகள் உள்ளன. அதனை தீர்க்க வேண்டியுள்ளது. அதனால் அது என்ன என்பது சொல்ல மாட்டேன்' என்று வீனஸ் கூறியுள்ளார். இருப்பினும் மே மாதம் இறுதியில் ஆரம்பமாகும் பிரெஞ்சு ஓபன் டென் னிஸ் போட்டியில் விளையாட அவர் விருப்பம் தெரிவித்து இருக்கிறார்.

வீட்டில் இருந்து கொண்டு டி.வி.யின் மூலம் போட்டியை பாாக்க நான் விரும்பவில்லை. இந்த வாரம் வீட்டில் டி.வி.யை பார்ப்பதே போதும் என்று மேலும் அவர் குறிப்பிட்டார். (5)

## ஒக்டோபரில் இந்தியாவுக்கு ஆஸி.சுற்றுப்பயணம்

### 4 டெஸ்ட்களில் ஆடவுள்ளது

இந்தியா-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே எதிர்வரும் ஒக்போபர்-நவம்பர் மாதங்களில் நான்கு டெஸ்ட் போட்டிகள் நடை பெறுகின்றன. முதல் போட்டி பெங்களூரில் ஒக்டோபர் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக இந்திய கிரிக்கெற்சபை அறிவித்துள்ளது.

ரிக்கி பொண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணியினர் செப்டம்பர் 29 ஆம் திகதி இந்தியா வருகின்றனர். ஒக்டோபர் 2 முதல் 5 வரை பயிற்சி ஆட்டம் ஒன்றில் விளையாடுகின்றனர். இதற்கான இடம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. பயிற்சி ஆட்டம் முடித்து மூன்று நாள் ஓய்வுக்குப் பின்னர் டெஸ்ட் போட்டி ஆரம்பமாகிறது. முதல் போட்டி :- ஒக்டோபர் 9-12 (பெங்களூர்), 2ஆவது போட்டி ஒக்டோபர் 17-21 (மொகாலி), 3ஆவது போட்டி ஒக்டோபர் 28- நவம்பர் 1 (புதுடில்லி), 4ஆவது போட்டி: -நவம்பர் 5-9 (நாக்பூர்). (5)

## ஐபிஎல் கிரிக்கெற் தொடரில்

# மும்பை அணி கோப்பை வெல்ல துடுப்பாட்டத்திலும் பந்து வீச்சிலும் அசத்துவேன்

## ஜெயசூர்யா நம்பிக்கை

(மும்பை)

ஐபிஎல் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக அதிக ஓட்டங்கள் குவித்து அசத்துவேன் என்று இலங்கை அதிரடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சச்சின் தலைமையிலான 'மும்பை இந்தியன்ஸ்' அணியில் இடம் பெற்றுள்ள அவர் இது குறித்து கூறிய தாவது, ஐபிஎல் போட்டியில் விளையாடு வதை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். மும்பை அணி கோப்பையை வெல்ல என்னால் முடிந்த அளவுக்கு உதவுவேன்.

உலகின் தலைசிறந்த வீரரான சச்சினுடன்



இணைந்து ஆரம்ப வீரராகக் களமிறங்குவது என் கிரிக்கெற் வாழ்க்கையில் மகத்தான அனுபவமாக இருக்கும். ஆஸி. முத்தரப்பு தொடரின் போது ஐபிஎல் போட்டியில் விளையாடுவது பற்றி அவருடன் ஆலோசித்தேன். இலங்கை அணிக்காக விளையாடுவது எனக்கு மிகவும் பிடித்தமானது.

பல்வேறு நாட்டு வீரர்கள் அடங்கிய ஐபிஎல் அணியில் விளையாடுவது முற்றிலும் வித்தியாசமாக இருக்கும். மும்பை அணியில் பொலக்த பெர்னாண்டோ, உத்தப்பா போன்ற சிறந்த வீரர்கள் இடம்பெற்றுள்ளதால், கோப்பை வெல்வோம் என்ற நம்பிக்கை உள்ளது. இப்போது முழு உடல்தகுதியுடன் உற்சாகமாக உள்ளேன். துடுப்பாட்டம் பந்து வீச்சு இரண்டிலுமே அசத்துவேன். இவ்வாறு ஜெயசூரியா கூறியுள்ளார். (5)

# ஒலிம்பிக் ஜோதி உலாவுக்கு டில்லியில் பிரமாண்ட ஏற்பாடு

(புதுடில்லி)

டில்லியில் ஒலிம்பிக் ஜோதி ஓட்டம் வெற்றிகரமாக நடத்தப்படும் என இந்திய ஒலிம்பிக் சங்க தலைவர் சுரேஷ் கல்மாடி தெரிவித்துள்ளார். லண்டன், பரிசில் ஒலிம்பிக் ஓட்டத்துக்கு




திபெத்தியர்கள் இடையூறு செய்ததால் டில்லியில் பலத்த பாதுகாப்புக்குஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

வரும் ஆகஸ்ட் 8ஆம் திகதி சீன தலைநகர் பீஜிங்கில் ஒலிம்பிக் போட்டி துவங்குகிறது இதில் திபெத் மற்றும் தைவான் அணிகள் சேர்ந்து ஒருங்கிணைந்த சீன அணியாக கலந்து கொள்ளும் என சீனா அறிவித்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து திபெத்தியர்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இவர்களுக்கு மனித உரிமை அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்தச் சூழலில் பீஜிங் ஒலிம்பிக் ஜோதி தனது உலக பயணத்தை துவக்கியது. இந்த ஜோதி செல்லும் இடங்களில் எல்லாம் திபெத் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். லண்டன் பரிசில் ஜோதியை பிடுங்கி அணைக்க பார்த்தனர்.

இந்நிலையில் வரும் 17ஆம் திகதி டில்லியில் பீஜிங் ஒலிம்பிக் ஜோதி ஓட்டம் நடக்கிறது. இதில் இந்தியாவின் முன்னணி விளையாட்டு நட்சத்திரங்களான சச்சின், மில்காசிங், கோபிசந்த், அஞ்சு பாபி ஜார்ஜ், பி.டி.உஷா ஆகியோர் பங்கேற்கின்றனர். கால்பந்து அணித்தலைவர் பாய்ச்சல் பூட்டியா பங்கேற்க மறுத்துவிட்டார். இந்தியாவில் திபெத்தியர்கள் அதிகம் இருந்தாலும் ஒலிம்பிக் ஓட்டம் வெற்றிகரமாக நடக்கும் என்கிறார் இந்திய ஒலிம்பிக் சங்க தலைவர் சுரேஷ் கல்மாடி. இது குறித்து அவர் அளித்த பேட்டி, ஒலிம்பிக் போட்டிகளுக்கு வீரர்கள் மத்தியில் மட்டுமல்ல இந்தியர்கள் அனைவரிடமும் இருந்து வரவேற்பு கிடைக்கும் என நம்புகிறோம்.

இதற்காக ஜோதிர் ஆதித்ய சிந்தியா, சச்சின் பைலட் ஆகியோருக்கு அழைப்பு விடுத்துள்ளோம். ஒலிம்பிக் ஜோதி ஓட்டம் மிகப் பெரும் கௌரவத்துக்குரியது. இதில் எந்த அசம்பாவிதமும் நடக்காமல் பார்த்துக் கொள்வோம். ஒவ்வொரு அடியும் திட்டமிட்டு எடுத்துவைத்துள்ளோம். தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஒலிம்பிக் ஜோதி ஓட்டத்திற்காக நீண்ட காலமாக தயாராகி வருகிறோம். கிரண்பேடி ஒலிம்பிக் ஓட்டத்திலிருந்து விலகியது அதிர்ச்சி அளிக்கிறது. பிரச்சினையாக கருதப்படும் இடங்களுக்கு பாதுகாப்பு விஷயத்தில் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். இதில் பங்கேற்க பல வீரர்களும் ஆர்வத்துடன் முன்வந்துள்ளனர். மொத்தம் 50 வீரர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும். இதை கோலாகலமாக நடத்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஒலிம்பிக் ஜோதி பயணிக்கும் பாதையை இன்னும் இறுதி செய்யவில்லை. மூன்று அல்லது நான்கு திட்டத்தை தயார் செய்துள்ளோம். இதில் ஒன்றை விரைவில் தேர்ந்தெடுப்போம் இவ்வாறு கல்மாடி தெரிவித்தார். (5)

## இந்திய-தென்னாபிரிக்க அணிகளிற்கிடையிலான

# தீர்க்கமான மூன்றாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

(கான்பூர்)

சிமித் தலைமையிலான தென்னாபிரிக்கா கிரிக்கெற் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் சென்னையில் நடந்த முதல் டெஸ்ட் சமனிலையானது. அகமதாபாத்தில் நடந்த 2ஆவது டெஸ்டில் தென்னாபிரிக்கா இன்னிங்ஸ் வெற்றிபெற்றது.



இந்தியா-தென்னாபிரிக்கா அணி மோதும் தீர்க்கமான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கான்பூரில் இன்று ஆரம்பமாகிறது. இப் போட்டி இந்திய அணிக்கு மிகவும் முக்கியமானது. இதில் கண்டிப்பாக வெற்றிபெற்றாக வேண்டும். அப்போதுதான் தொடரை சமன் செய்ய முடியும். தென்னாபிரிக்கா சமநிலை செய்தாலே தொடரை கைப்பற்றிவிடும். அகமதாபாத்தில் மோசமான தோல்வியை சந்தித்த இந்திய அணி தென்னாபிரிக்காவுக்கு பதிலடி கொடுக்குமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் வீரர்கள் காயம் இந்திய அணிக்கு பெரும் கவலையை ஏற்படுத்தி உள்ளது. அணித் தலைவர் கும்ளே, ஹர்பஜன் சிங், தோனி, யுவராஜ் சிங் ஆகியோர் இன்னும் முழு உடல் தகுதியுடன் இல்லை. காயம் காரணமாக அகமதாபாத் டெஸ் டில் விளையாடாத டெண்டுல்கர் இன் றைய டெஸ்டிலும் ஆடாதது பலவீனமே.

2ஆவது டெஸ்டில் இந்திய அணி துடுப் பாட்டத்தில் சொதப்பி விட்டது. இதனால் டெண்டுல்கர் இடத்தை நிரப்பும் வகையில் யுவராஜ் அல்லது கைப்புக்கு வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. கைப், இஷாந்த் சர்மா உடல் தகுதி பெற்றுவிட்டதால் முன்னைய டெஸ்ட் விளையாடலாம் என்று தெரிகிறது. ஸ்ரீகாந்த் அல்லது பதான் இடத்தில் அவர் சேர்க்கப்படுவார்.

தென்னாபிரிக்க அணியின் துடுப்பாட்டத்தில் கலிஸ், அம்லா, டிவில்லியர்ஸ் , சிமித், மக்கன்சியும், பந்து வீச்சில் ஸ்ரையன், நிற்னி, மோர்கல் ஆகியோரும் நல்ல நிலையில் உள்ளனர். தென்னாபிரிக்காவின் வேகப் பந்து வீச்சு இந்தியாவுக்கு சவாலாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

> பயந்தவன்-பத்து தைரியசாலிகளைக் கூடப் பயந்தாங்கொள்ளியாக மாற்றிவிடுவான்.
>
> -ஜேர்மன்

வலம்புரி

## சர்வதேசத்தின் இறுக்கமற்ற போக்கு இலங்கை அரசு தப்பித்துக் கொள்ளும் வாய்ப்பு

இலங்கை இனப்பிரச்சினை சமாதான வழியில் தீரும் என்ற நம்பிக்கை முழுமையாக அற்றுப்போய் விட்டது.

இலங்கை அரசு யுத்தத்தையே விரும்புகிறது. யுத்தத்தின் மூலம் தமிழரின் உரிமைப் பிரச்சினையை முடிவு கட்ட இலங்கை அரசு கொண்டுள்ள தீர்மானத்தை உலகின் சில நாடுகள் ஊக்கிவிப்பது போலத் தெரிகின்றது.

குறிப்பாக; இந்தியா, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகள் இலங்கைக்குத் தேவையான ஆயுதங்களை வழங்கி இலங்கையில் யுத்தம் நீடிப்பதை உறுதி செய்து வருகின்றன.

அதேநேரம் இனப்பிரச்சினையை சமாதான வழியில் தீர்த்துவைக்குமாறு அரசுக்கு ஆலோசனை கூறுகின்ற நாடுகள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்காமல் ஏனோதானோ என்ற நிலைப்பாட்டில் உள்ளன.

இதன் காரணமாக இலங்கை அரசு தான் நினைத்தபாட்டில் தமிழர் பிரதேசங்களில் யுத்தத்தை முடுக்கி விட்டுள்ளது.

மக்கள் வாழும் பிரதேசங்களில் எறிகணைத் தாக்குதல் நடத்துவது, விமானக் குண்டுவீச்சு நடத்துவது என்பன மனித உரிமைகளை மீறும் மோசமான சம்பவங்களாக இருக்கின்ற போதிலும், அதனைத் தடுக்கவேண்டிய அமைப்புக்களும் வல்லாதிக்கமுடைய நாடுகளும் மௌனம் காக்கின்றன.

இதன் காரணமாக மன்னார் மடுத்தேவாலயப் பகுதியில் கண்டபாட்டில் எறிகணைத் தாக்குதல் இடம்பெற்றவண்ணமுள்ளன.

தமிழ் மக்களின் புனித வழிபாட்டுத்தலம் சேதமடையும் அளவிற்கு அரசு போர் நடத்துவது, குறித்த இனத்தின் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக என்பதை புரிந்து கொள்ளமுடியும்.

அதேவேளை இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்காமல் வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரித்து கிழக்கு மாகாணத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதானது, தமிழர்களின் விருப்புக்கு புறம்பானதாகும்.

இருந்தும் நாம் நினைப்பதே இந்த நாட்டில் நடைமுறையாகும் என்ற நினைப்பில் அரசு காரியங்களைச் செய்து வருகிறது.

ஆனால் இத்தகைய விதண்டாவாதச் செயல்கள் எதிர்கால சூழமைவை மேலும் மோசமாக்கும் என்பதே நிஜமாகும்.

வடக்கு கிழக்குத் தமிழர் தாயகம் என்ற அடிப்படைக் கோட்பாட்டை ஏற்காத தமிழ்த்தரப்புக்கள் இல்லை எனலாம்.

இதேபோல் நியாயத்தை- இலங்கையின் பூர்வீக வரலாற்றை தெரிந்துகொண்ட சிங்கள அமைப்புக்களும் வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்பதை ஏற்றுள்ளன.

ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு தமிழர்களின் பூர்வீக தாயகத்தை இரண்டாகப் பிரித்து கிழக்கு மாகாணத்தில் தேர்தலை நடத்துகிறது.

தமிழர் தரப்பு ஏற்றுக்கொள்ளாத தேர்தல் எதற்கானது? யாருக்கானதென்ற கேள்விகள் எழும் பட்சத்தில், அங்கும் பேரினவாத சிந்தனையில் தோன்றிய அடக்குமுறையே கிழக்குத் தேர்தல் எனக் கூறிக்கொள்ளலாம்.

ஆக இலங்கை அரசு எழுந்தமானமாக-ஒருதலைப் பட்சமாக நடந்துகொள்வதற்கு மூல காரணம் சர்வதேச அழுத்தம் அசமந்தமாக இருப்பதே ஆகும்.

# பொது மக்களின் உரிமைகளை அரசும் விடுதலைப்புலிகளும் மதிக்க வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

(கொழும்பு)

பொதுமக்கள் மீதான தாக்குதல்களை விடுதலைப்புலிகள் உட்பட ஆயுதக் குழுக்கள் நிறுத்துவதுடன் சர்வதேச சட்டத்துக்கு அமைய பொதுமக்களின் உரிமைகளை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மதிக்க வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்பதற்கு சுதந்திரமான சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பாளர்களை தாமதமின்றி அரசாங்கம் அனுமதிக்க வேண்டுமெனவும் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே உட்பட 12 பேர் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டிருப்பதைக் கண்டித்திருக்கும் சர்வதேச மன்னிப்புச் சபை பொதுமக்களை இலக்குவைத்து நடத்தப்படும் தாக்குதல்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவது சர்வதேச மனித உரிமைகளை மீறும் செயல் என்பதுடன் போர் குற்றமெனத் தெரிவித்துள்ளது.

இவ்வாறான தாக்குதல்களை நடத்துபவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை விடுத்துள்ள அறிக்கையில் கோரிக்கை விடுத்துள்ளது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அறிக்கையின்படி 2008ஆம் ஆண்டின் முதல் ஆறு கிழமைகளில் 180 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 270ற்கும் அதிகமானவர்கள் காயமடைந்திருப்பதாக மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியுள்ளது.

மோதலில் ஈடுபடும் தரப்பினரைக் குறிவைத்துத் தாக்குவதானது சட்ட விரோதமானது அல்ல எனினும் மோதல்களுடன் தொடர்பற்ற சாதாரண மக்களை இலக்குவைத்துத் தாக்கப்படுவது தடுக்கப்பட வேண்டியது. பொதுமக்கள் மனித கேடயங்களாகப் பயன்படுத்தப்படுவது தவிர்க்கப்படவேண்டியது என சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அத்துடன் மடுப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெறும் மோதல்களில் பொதுமக்கள் சிக்கியிருப்பது குறித்தும் சர்வதேச மன்னிப்புச்சபை கவலை வெளியிட்டுள்ளது. சர்வதேச சட்டங்களுக்கு அமைய மோதல்கள் இடம்பெறும்போது இரண்டு தரப்பினரும் கலாசார சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல மக்களைப் பாதுகாப்பதற்கு விடுதலைப்புலிகளும் இலங்கை அரசாங்கமும் உரிய நடவடிக்கை எடுக்குமென சர்வதேச மன்னிப்புச்சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (அ-5)

## நாட்டின் பொருளாதார வளர்ச்சி 2008இல் 7 வீதமாக உயரும் என்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

கடந்த மூன்று வருட காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரம் 6 வீதத்துக்கும் அதிகமான வளர்ச்சியைக் கண்டிருப்பதாகவும் கடந்த ஆண்டில் அது 6.8 வீதமாக வளர்ச்சி அடைந்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்த ஆண்டின் பொருளாதார வளர்ச்சி 7 வீதமாக அதிகரிக்கும் என மத்திய வங்கி எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் 2007ஆம்ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டுப் பேசும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் நாட்டின் பொருளாதாரம் 6.8 வீதமாக வளர்ச்சியடைந்திருப்பதாகவும் அதே பயங்கரவாதிகளால் 2001 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 1.4 வீதமாக வீழ்ச்சியடைந்ததாகவும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் தற்போது கிழக்கு மாகாணத்தில் உல்லாசப் பயணத்துறை, மீன்பிடித்துறை மற்றும் விவசாயத்துறை என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கைப் போன்று வடக்கும் விடுவிக்கப்பட்டு அங்கும் அரசியல் ரீதியான சுதந்திரம் வழங்கப்படும் எனத் தெரிவித்திருக்கும் ஜனாதிபதி 2003ஆம் ஆண்டில் 22 சதவீதமாக காணப்பட்ட வறுமை கடந்த ஆண்டில் 15 வீதமாகக் குறைவடைந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 2004 இல் 1,061 அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்ட தலா வருமானம் 2007இல் 1,600 அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பைக் கண்டுள்ளதாகவும் ஏற்றுமதியானது 12.5 வீதமாக வளர்ச்சியடைந்துள்ளதாகவும் ஏனைய ஆண்டுகளின் சராசரியுடன் ஒப்பிடுகையில் இது 10 வீத வளர்ச்சியாகும் எனவும் மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## நியமனம் 14 நாட்களுக்கு மேல் நீடித்தால் தொடர் போராட்டம்

### ஐ.தே.கட்சி எச்சரிக்கை

பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகமாக தம்மிக கித்துல்கொடவை நியமித்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் ஐக்கிய தேசியக்கட்சி, 14 நாட்களுக்கு பின்னரும் அவரது நியமனத்தை நீடித்தால் பாரியளவில் போராட்டங்களை முன்னெடுக்கப்போவதாக அறிவித்துள்ளது.

தம்மிக கித்துல்கொடவின் நியமனம் தற்காலிகமானது எனவும்,.14நாட்களுக்கே அவரது நியமனம் செல்லுபடியாகும் என அரசாங்கம் உறுதியளித்துள்ளதாகவும் அதன் பின்னரும் அவரது நியமனம் நீடிக்கப்பட்டால் தாம் போராடப் போவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

ஜோசப் மைக்கல் பெரேரா சபாநாயகராகக் கடமைபுரிந்த காலப் பகுதியிலும் இவ்வாறு தம்மிக்க கித்துல்கொடவுக்கு நியமனம் வழங்கப்பட்டதாகவும், ஆனால் அந் நியமனம் சட்ட விரோதமானது என சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா அறிவித்ததால் அரசாங்கம் அதனை வாபஸ் பெற்றுக்கொண்டதாகவும் தயாசிறி ஜயசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நியமன விவகாரத்தில் தலையிட வேண்டிய பொறுப்பு சபாநாயகருக்கு இருப்பதாகவும், இதுகுறித்து தற்போதைய சபாநாயகர் லொக்குபண்டார கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதேவேளை, ஜே.வி.பியின் பிளவுக்குப் பின்னணியில் ஐக்கியதேசியக் கட்சியே இருப்பதாக ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் பியசிறி விஜயநாயக்க தெரிவித்த கருத்தினை மறுத்துரைத்த தயாசிறி ஜயசேகர, ஜே.வி.பியின் கடந்த காலசெயற்பாடுகளே அக்கட்சி பிளவுண்டமைக்குக் காரணம் எனவும் அப்பிளவுக்கான காரணம் எதிர்காலத்தில் தெரியவரும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# வெள்ளி நற்சிந்தனை ௫

## பக்தியின் மொழி தமிழ்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

அலைபாயும் மனத்தை ஒருநிலைப்படுத்தி செயற்பட வைப்பதற்கு என்ன வழி என்ற தேடல் இன்று உலகெங்குமே நடைபெறுகின்றது. மக்களின் வாழ்வியல் நடைமுறைகள் மிக வேகமாகச் செயற்படுகின்றன. காலத்தின் கடப்பை விட மனிதனின் வாழ்க்கைச் சகடம் துரிதமாக உருண்டுகொண்டு இருக்கிறது. இளமையும் முதுமையும் போட்டி போட்டு வாழ்வியல் தடத்தில் விரைந்துகொண்டிருக்கின்றன. இதனால் மனித மனங்களின் அமைதியின்மையே தோன்றியுள்ளது. எனவே மனித மனத்தை ஆற்றுப்படுத்த ஒரு சீர்மியச் செயற்பாடு உடனடியாகத் தேவைப்படுகின்றது.

உலகெங்கும் இத்தகைய தேடல் நடைபெறும் வேளையில் எமது முன்னோர்களின் அறிவூட்டல்களை ஒரு முறை நாம் எண்ணிப்பார்ப்பது நன்று. நாளாந்த வாழ்க்கையை நல்ல முறையிலே மன நிறைவுடன் பயன்பட வாழ்வதற்கு அவர்கள் காட்டிய வழிபாட்டு நெறி இன்றும் ஏற்றதாயுள்ளது. திருக்கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்யும் போது மனஅமைதியும் நிறைவும் ஏற்படும் என்ற அனுபவத்தை அவர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

சமயகுரவர்களில் வயதில் மிக இளையவரான ஞானசம்பந்தர் காட்டும் வழி காலத்திற்கு ஏற்புடையதாயுள்ளது. நாள்தோறும் திருக்கோவில் செல்வது என்ற நியமத்தை முதலில் ஏற்படுத்தவேண்டும். அவ்வாறு அங்கு சென்று நீரும் மலரும் தூவி சித்தத்தை ஒருநிலைப்படுத்தவேண்டும். அவர்கள் சிவனருள் பெறுவார். சம்பந்தர் தனது அனுபவத்தை பாடலிலே கூறியுள்ளார். கோயில் வழிபாடு வாழ்வைச் செம்மைப்படுத்தும். என்பதில் சம்பந்தருக்கு நல்ல நம்பிக்கையிருந்தது. கோயிலின் சூழல் மனித மனத்தைப் பரவசப்படுத்தும். வளமான நீர்வளம் நிறைந்த கோயில் ஒன்றைக் காட்டுகிறார். யானையின் கோடும் மயிற்பீலியும் வாரிக்கொணரும் தத்து நீர்ப் பொன்னியின் அழகுக்கோலம் அவரைக் கவர்ந்தது போலவே எல்லோரையும் கவரும் என எண்ணினார்.

'திருச்சாய்க்காடு' என்னும் திருத்தலம் இயற்கை எழிலுடன் மக்கள் மனங்கவரும் அழகிய வழிபாட்டுத்தலமாகும். பொன்னி நதியின் நீர் வளம் அங்கமைந்த சிவன் கோயிலின் சூழலை மேலும் குளிர்மையுறச் செய்துள்ளது. நாள்தோறும் அங்கு கால்கள் செல்ல கைகள் மலர் பறிக்க மனம் இறை சிந்தையில் ஈடுபட்டுப் பரவசம் அடையும். புறத்தே தாக்கிய உணர்வுகள் எல்லாம் ஒழியக் கோயிலின் கோல அழகில் மெய்மறந்து நிற்கும் மக்களைச் சம்பந்தர் அன்று காட்டினார். இன்றுவரையும் அது மனித மனங்களை வசப்படுத்தும் பாடலை படிப்போர் இதனை நன்குணர்வார்.

'நித்தலுந் நியமஞ் செய்து நீர் மலர் தூவிச்
சித்தமொன்ற வல்லார்க் கருளுஞ் சிவன் கோயில்
மத்தயானையின் கோடும் வண்பீலியும் வாரித்
தத்து நீர்ப் பொன்னி சாகரமேவு சாய்க்காடே'

(சம்பந்தர் பாடல்)

## தமிழர் பகுதியில் உணவு...

சேர்ந்த சராசரி வறிய நபர் ஒருவர் 1,696 கலோரிகளை உணவு வேளையின்போது பெற்றுக் கொள்ளும் அதேவேளை வறிய மக்கள் அல்லாதோர் 2,194 கலோரிகளைப் பெற்றுக் கொள்கின் றனர் என புள்ளி விபரத் திணைக்களம் 2008 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிராமப் புறங்கள் மற்றும் வடக்கு- கிழக்கில் குறிப்பாக 25 ஆண்டுகளாக நிலவி வரும் போர்ச் சூழ்நிலைகளின் காரணமாக குறை போசாக்கு நிலவுவதாக உலக உணவுத் திட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு வெப்ப வலயங்கள் முதல் மத்திய மலைநாடுவரை இந்த குறை போசாக்கு நிலைமை காணப்படுவதாக உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கிளைத்துணைத்தலைவர் ஜேன் யுவெஸ் லெக்கும் தெரிவித்துள்ளார்.

இவை இலங்கையில் மிக வறிய பிரதேசங்களாகக் கருதப்படுகின்றது. இந்தப் பிரதேசங்களில் மிக உச்ச அளவிலான குறை போசாக்கு, பின்தங்கிய கல்வி நிலை மற்றும் பின்தங்கிய சுகாதார வசதிகள் காணப்படுகின்றன என அவர் குறிப்பிட்டார்.

பின்தங்கிய பிரதேசங்களில் வறுமை மற்றும் அதிக சக்தி தேவைப்பாடு என்பன பிரதான அம்சங்களாகக் காணப்படுகின்றன. குறிப்பாக விவசாயப் பிரதேசங்களே பொதுவாக பின்தங்கிய பிரதேசங்களாகக் கருதப்படுகின்றது.

இந்தப் பிரதேச மக்கள் அநேகமாக கடும் உடல் உழைப்பாளிகளாகக் காணப்படுவதால் அதிக சக்தி (கலோரிப் பெறுமானம்) தேவைப்படுகின்றது என யுனிசெவ் நிறுவனத்தின் முதன்மைத் தொடர்பாளர் ஹோடன் வேய்ஸ் தெரிவித்தார்.

இலங்கையின் வருடாந்த தனிநபர் உள்நாட்டு உற்பத்திக்கு (1,599 அமெரிக்க டொலர்) ஒப்பிட்டளவில் மிகக் குறைந்தளவு விகிதாசாரத்தில் இலங்கையில் பிறக்கும் குழந்தைகளின் எடை காணப்படுவதாக ஜேன் யுவெஸ் லெக்கும் குறிப்பிட்டார்.

எனினும் இலங்கையில் சிசு மரண வீதத்துடன் ஒப்பீடு செய்யும்போது மூன்று மடங்கு அதிகமாக சராசரி குழந்தைகளின் எடையைக் காட்டுகின்றது என அவர் தெரிவித்தார்.

14 வீத ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் குறைந்த எடைக்கான நோய்க் குறிகளை காட்டுவதாகவும் 29 வீத ஐந்து வயதுக்குட் பட்ட குழந்தைகள் வயதுக்கேற்ற எடையுடன் காணப்படவில்லை எனவும் யுனிசெவ் தெரிவிக்கின்றது.

மேலும் இனப்பிரச்சினையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இந்த நிலைமை இன்னும் மோசமாகக் காணப்படுகின்றது. அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான போரின் காரணமாக உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கு நிலை தொடர்பாக அதிக கவனம் செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது என யுனிசெவ் தெரிவிக்கின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உணவுப் பாதுகாப்பின்மை மிக முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை ,மன்னார் மற்றும் வவுனியா மாவட்டத்தில் சில பகுதிகளில் உள்ள மக்கள் கடுமையான உணவு மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக உலக உணவுத் திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து தெரியவருகின்றது.

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் மனித உரிமை உதவிகள் தேவைப்படுவதாகவும் ஆய்வு முடிபுகளின் மூலம் தெரியவருகின்றது. இலங்கையின் பண வீக்க அளவு முன்னொருபோதும் இல்லாத வகையில் உயர்வடைந்து செல்வதனால் தேசிய போசாக்கு மட்டம் மேலும் வீழ்ச்சியடையக் கூடும் என உலக உணவுத் திட்ட அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கிரமமற்ற முறையில் பருவ காலங்களில் பெய்த கடும் மழையினால் பெரும்போக நெற்செய்கை மிக மோசமாக பாதிக்கப்பட்டது. மேலும் உலக சந்தையில் விலையேற்றம் மற்றும் உணவுப் பொருள்களுக்கான விலை அதிகரிப்பு என்பவற்றின் காரணமாக இலங்கை எதிர்காலத்தில் பாரிய உணவு நெருக்கடியினை எதிர்நோக்கக் கூடும் என உலக உணவுத் திட்டத்தின் இலங்கைத்துணைத் தலைவர் ஜேன் யுவஸ் லெக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளார் என்று அதில் தெரிவிக்க ப்பட்டுள்ளது. (எ-5)

## ரெலிக்கொம் கட்டணத்தில் 20 வீதத் தள்ளுபடி

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு சிறிலங்கா ரெலிக்கொம்மின் அழைப்புக் கட்டணத்தில் 20 வீதத் தள்ளுபடி வழங்கப்படவுள்ளது. இக் கட்டணத் தள்ளுபடி, இன்று நள்ளிரவு 12 மணிமுதல் 13 ஆம் திகதி இரவு 12 மணி வரை மேற்கொள்ளப்படும் அழைப்புக்களுக்கே வழங்கப்படவுள்ளதாக ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

## அமைச்சர்...

பூதவுடல் அவரது வீட்டிலிருந்து வெளியே கொண்டுவரப்பட்டு ஊர்வலம் ஆரம்பமான போது ஹெலியிலிருந்து மலர் தூவப்பட்டது. அதன் பின்னர் இரங்கல் உரைகள் நிகழ்த்தப்பட்டதோடு மணற்சேனை றோமன் கத்தோலிக்கத் தேவாலய மயானத்தில் அமைச்சரின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இறுதி ஊர்வலத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். (ச-5)

## ஒரு துப்பாக்கிச் சூட்டை...

மேலும் தெரிவிக்கையில்,

மடுப் பிரதேசத்தில் செயற்படும் புலிகளின் அழுத்தங்கள் காரணமாக மடுமாதா திருச்சொரூபம் இரகசியமான முறையில் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றது. அதனை படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குக் கொண்டு வருவதற்குப் பதிலாகக் கட்டுப்பாடற்ற தேவன்பிட்டியிலுள்ள புனித செபஸ்தியார் ஆலயத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இது தொடர்பில் புலிகளுக்குச் சார்பான ஊடகங்களில் வெளியாகும் தகவல்களால் நாட்டின் கத்தோலிக்க சமூகத்தவர்களின் மத உணர்வுகள் பாதிப்படையக் கூடும். ஆகவே அதுபற்றிய முழுமையான விளக்கத்தை அளிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

மடுப் பிரதேசத்தை சமாதான வலயமாகப் பிரகடனப்படுத்துமாறு மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையால் அரசாங்கத்திற்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று இராணுவத்தினர் அந்தப் புனிதப் பகுதியை மதித்து நடந்திருக்கின்றார்கள்.

எதிரிகள் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் கூட படையினர் புனிதப் பகுதியை நோக்கி ஒரு துப்பாக்கிச் சூட்டையேனும் நடத்தவில்லை என்றார். (ச-5)

## அமைச்சர் ஜெயராஜின்...

டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையிலே மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

ஏப்ரல் 6ஆம் திகதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளேயை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றேன். இதில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறான தாக்குதல்கள் இலங்கை மக்களது வாழும் உரிமையையும் பாதுகாப்பையும் நிராகரிப்பதாக அமைந்துள்ளது. இவ்வாறான தாக்குதல்கள் சர்வதேச சட்டங்களை அடிப்படையில் மீறுவனவாக அமைந்துள்ளன.

இந்தத் தாக்குதல் உட்பட பொது இடங்களிலும் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. சர்வதேச சட்டங்களை மீறும் வகையில் சிவிலியன்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கானசந்தர்ப்பத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## ஸ்லோவோக்கியாவிடமிருந்து...

25ஆண்டுகளாக போர்நடந்துவரும் இலங்கையில் இந்த ஆயுதங்கள் அனைத்துமே பொதுமக்களுக்குஎதிராகத்தான்பயன்படுத்தப்பட உள்ளது என்றும் அவ் அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

பொதுமக்களுக்கு எதிராக பயன்படுத்தக் கூடிய அபாயகரமான ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் நடத்தை விதிமுறைகள் தடை செய்திருக்கின்றன என்று அந்த அமைப்பின்ஆயுதவர்த்தக கண்காணிப்புக் குழுத் தலைவர் றோய் ஸ்பிஸ்டெர் தெரிவித்துள்ளார்.

எங்கு மனித உரிமை மீறல்கள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறதோ அல்லது எங்கு பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பு சீர்குலைந்திருக்கிறதோ அப் பகுதிகளுக்கு விற்பனை செய்யக் கூடாது என்று அந்த நடத்தை விதி முறையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இன மோதல்களில் இலங்கை இராணுவம் பயன்படுத்தும் ஆயுதங்களால் சில நேரங்களில் பொதுமக்கள் பாரபட்சமின்றி பாதிக்கப்படுகின்றனர் என்று அறிக்கைகள் வெளியாகியிருப்பதையும் றோய் ஸ்பிஸ்டெர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசாங்கமானது போர் நடைபெறும்பகுதிகளுக்குபெரும்பாலான சுயாதீன கண்காணிப்பாளர்களை பயணிக்க தடை விதிக்கப்பட்டிருப்பதால் முழு உண்மை அறிய முடியாமல் உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.இது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் கருத்து தெரிவிக்கவில்லை.

ஆனால் வெளிவிவகாரங்களுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையாளர் பெனிட்டா பெரிர்ரோவின் பேச்சாளர் கிறிஸ்டி னா ஹோக்மான் ஒவ்வொரு ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடும் எப்படி நடத்தை விதிமுறைகளை செயற்படுத்தப்படுகிறது என்று கூறியுள்ளார். இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆயுத விற்பனை தொடர்பிலான விதிகளை மீறவில்லை என்று ஸ்லோ வோக்கிய பொருண்மிய அமைச்சு கூறியுள்ளது.(ச-5)


### மனோதத்துவ வைத்தியம் (CENERAL PSYCHOTHERAPHY)

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்

ஏராளமானோரின் வேண்டுகோளுக்கு இணங்க புதுவருட தினமான ஏப்ரல் 13 ஆம் திகதிவரை சந்திக்கவுள்ளார்.

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்மா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளை போகுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கும் வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவும், கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாக காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

**Sexual Disorders (ஆண்மைச் சக்தி குறைவு)**

(பிறவியிலேயே ஆண்மையற்றவர்களைத் தவிர) எவ்வித மோசமான தாம்பத்திய கோளாறுகள்ளயும் மனோதத்துவ ரீதியிலும், திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் ...
பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்
ஸ்ரீ பாலாஜி இன்
293, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Contact No. 077 7569205, 222 2417

(C-999)



### நாளை ஆரம்பம்

A/L 2010

(கலை, வர்த்தகப் பிரிவுகள்)


காலை - 8.30

DMI

நாவலர் வீதி | ஸ்ரான்லி வீதி

(C-974)


### ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மண் மகிழ 18.01.1942

மண் நெகிழ 08.04.2003

அமரர்

நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம்

துணிவோடு துணையாக துன்பங்கள் களைந்தீர்
தூணாக இருந்தெங்கள் துயரங்கள் தீர்த்தீர்
காணாமல் ஐந்தாண்டு கழிந்திடவேன் வைத்தீர்
விழுதாக வாழ்ந்தெம்மை விருட்சமாய் வளர்த்தீர்
தொழுத்தகு தெய்வமாய் தோதாய் நீர் ஆனீர்
அழுகின்றோம் தொழுகின்றோம் ஆற்றும் எம்மனதை
முழுதாக எம்வாழ்வில் மூழ்கிவிட்டீர்! சாந்தி!!

உசன், மிருசுவில்.

இங்ஙனம், குடும்பத்தினர்


2012 MAYல் நீங்களும் ஒரு பொறியியலாளர் Be An Engineer in 2012 May

SONA[WIN] விசேட பிரதிநிதி யாழ்ப்பாணத்தில் [10.04.2008-24.04.2008]

2008-2009 கல்வியாண்டிற்கான உடனடி அனுமதிகள்

Cousers Offered:
Bachelor of Engineering (BE)
- Civil Engineering - Mechanical Engineering - Electronics & Communication Engineering - Electrical & Electronics Engineering
- Computer science & Engineering - Information Technology - Fashion Technology.
Post Graduate courses (ME)
- M.B.A(Master of Business Administration) - M.C.A (Master of Computer Applications)

SONA COLLEGE OF TECHNOLOGY
Sona Nagar, Salem - 636005, Tamilnaadu, India

For more information & Spot admission :-

V4 EDUCATIONAL CONSULTANCY PRIVATE LIMITED

Mr.S.Jeyakanth (Special Representative) Mobile - 0773867257 jeyakanth84@gmail.com

Mr.T Elankeethan (Jaffna) Mobile - 0775936343 keethan_15@yahoo.com

Mr.K.Sanjey (Colombo) Mobile - 0773107808 sanjey20@hotmail.com

APPROVED BY AICTE, AFFILIATED TO ANNA UNIVERSITY & ISO CERTIFIED


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.04.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.